364

…குதி 6.] 1927௵ ஜூன்மீ 1உ [பகுதி 5.

# மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தா
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம், சென்னை.

OFFICE OF THE REGISTRAR
20 JUL 1927

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமா குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆன போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஞு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறு மாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவு பெறும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்ட ஜெயங்கள்" என்ற நாவல்கள் முடிவுபெற்று 1927ஞு ஜனவரிமீத்திலிருந்து கற்பகச்சோலையின் அற்புதக் கொலை என்ற நாவல் தொடங்கப்பட்டு சென்ற ஏப்ரல் மாதத்தோடு முடிவுபெற்றிருக்கிறது. இப்போது கடற் கொள்ளைக்காரன் என்ற நாவல் ஆரம்பமாகி நடந்து வருகிறது. முடிவான ஐந்து நாவல்களும் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. 1927-ம் வருஷத்திற்குப் புதிதாகச் சேரும் சந்தாதாரர்களுக்கு 1927ஞு ஜனவரிமீத்தில் தொடங்கப்பட்ட "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" என்னும் நாவலின் ஒரு சஞ்சிகை மட்டும் கிடைக்காததலால் அவர்கள் சந்தாத் தொகையில் கூட 4 அணா சேர்த்து ரூ. 2—12—0 அனுப்பிவிட்டால் அந்த சஞ்சிகையும் அவர்களுக்குச் சேர்த்தனுப்பப்படும். 1928ஞு ஜனவரிமீ வரை வெளிவரும் மற்ற நாவல் சஞ்சிகைகளும் அனுப்பப்படு இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்ட அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ மு பணம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ் கைக்கு வருஷ ஆரம்பம்: எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந் லும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வை கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்க

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் | ரூ. | 4 | 0 | 0 |
| பவளத்தீவு 2 பாகமும் | ,, | 3 | 0 | 0 |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ,, | 9 | 10 | 0 |
| அர்ஜுனஸிங், சுந்தர் | ,, | 0 | 2 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | |
| கற்பகச்சோலையின் அற்புதக்கொலை | ரூ. | 1 | 4 | 0 |

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதரா

364



20 JUL 1981

அவ்வீடு மிக்க புராதனமானது; அடிக்கும் கொடூரமான புயற்காற்றில் அதன் உத்தரங்கள் சட்டங்கள் முதலியவை மறுவிநாடி முறிந்து விழும்போல் பயங்கரமாய்ச் சத்தமிட்டன. ஆகையால் எல்லப்பன் எவ்வளவோ தெரிந்தவனாகவும் உலக அனுபவமுடையவனாகவு மிருப்பினும் எந்த விநாடி வீடு விழுந்துவிடுமோ என்ற திகிலடைந்தவனாகி “அப்பா! நான்கூட வந்துவிடுகிறேன்” என்றான்.

தன் தமையனுடைய மொழிகளைக் கேட்டதே பாப்பம்மாள் மனதிலுண்டான வெறுப்பிற்கும் கோபத்திற்கும் ஓரளவில்லை. அவளுக்கு நாகம்மாள் மேல் உண்டாகியிருந்த கோபம் அவளோடுகூட வெளியிற் செல்வதாகக் கூறிய ஹாக்கர்மேலும் தன் வேலைக்காரியின்மேலும் கூட உண்டாகிவிட்டது. இப்போது தன் தமையனே வீட்டை விட்டுச் செல்வதாய்க் கூறியதைக் கேட்டதும், தன் தமையன் ஒரு கோழையென்று எண்ணி அவளுக்கு மிக்க ஆத்திரமுண்டாய்விட்டது. அவள் மிக்க கோபத்தோடு,

“என்னத்திற்காக நீ போகப்போகிறாய்? யாரோ ஒரு நாடோடிக் கிழவி கூறும் மிரட்டல் மொழிகளால் கடவுளால் சிருட்டிக்கப்பட்ட மனிதரும் அவர்கள் வீடும் அழிந்துபோவதாயின் அப்புறம் என்னவிருக்கிறது. கடவுள் வல்லமைதான் எம்மட்டென்று நினைப்பது? அவர் கருணையும் பாதுகாப்பும் என்னத்திற்கு உதவும்?” என்றாள்.

எல்லப்பன் தான் கோழைத்தனமாய் நடந்துகொண்டதாக உணர்ந்து, தன் தங்கையை நோக்கி “நான் இக்கொடூரமான புயற்காற்றுக்காக அஞ்சுகிறேன். ஆயினும் இந்த கௌரவமான பெரியம்மை இங்கு தங்கியிருப்பதாயின் நாமனைவரும் இப்புயற்காற்றும் மழையும் அடங்கும்



சென்னை-600 008
186815

வரையில் சந்தோஷமாகவிருந்து காலத்தைக் கழிக்கலாம்" என்றான்.

பாப்பம்மாள் தன் தமையன் அக்கிழவியை மரியாதையாகக் கூறியதைக் கேட்டதால் பின்னும் அதிக கோபமடைந்து, "என்ன? கௌரவமான பெரியம்மையா? ஏன் தந்திரமான கள்ளி, மாயஜாலக்காரி, என்று கூறலாகாதோ" என்று கூறிவிட்டு நேராய் நாகம்மாளை நோக்கி "ஏன்? நீ ஜாலக்கார கள்ளிதானே? ஜனங்களைப் பயமுறுத்தி ஏமாற்றும் வஞ்சகக் கள்ளிதானே? கௌரவமும் சமாதானமுமுடைய இந்த வீட்டைவிட்டுத் தட்சணம் வெளிப்பட்டுப் போ. போகாவிடின் நான் விளக்குமாற்றுக்கட்டை யெடுத்துக்கொண்டு ஜாடி யனுப்பிவிடுவேன்" என்றாள்.

அவள் மொழிகளைக் கேட்ட நாகம்மாள் மிக்க அற்பமாக ஆனால் அதிக வெறுப்போடு அம்மொழிகளைக் கருதியவள்போல் மிக்க அலட்சியமாக அவளை நோக்கிவிட்டு நேராகச் சாளரத்தினருகில் சென்று வானத்தை நோக்கியபடி மௌனமாகவிருந்தாள். வேலைக்காரியாகிய தங்கம்மாள் தன் எஜமானியாகிய பாப்பம்மாளினருகிற்சென்று இரகசியமாய், "ஓ அம்மா! உனக்கு இவள் விஷயம் சற்றும் தெரியாது. இவளுக்குக் கோபமூட்டாமல் ஜாக்கிரதையாயிரு. நீ என்ன செய்கிறாயென்பது உனக்கு இப்போது தெரியவில்லை. இவள் வல்லமை யித்தகையதெனவும் உனக்குத் தெரியாது. சாதாரணமாய் ஒரு மனிதன் ஒரு குதிரையின் மேலேறிக்கொண்டு சவாரி செய்வது போல் நாகம்மாள் மேகத்தையே வாகனமாகக்கொண்டு சவாரி செய்வாள். இப்பஞ்சபூதங்களும் அவள் பிரியப்படி நடக்கும் எனின் அதன்மேல் அவள் வல்லமையை நீயே யறிந்துகொள்ளலாம்" என்றாள்.

கோபம் மகா கொடியது. கோபமுடையோர்க்கு இந்த ஊனக்கண்ணே தெரியாதெனின் அறிவாகிய கண் கோபமாகிய கரிய திரையால் மூடப்படுவது மிக்க எளிதன்றோ. கோபமுடையோர்க்கு அச்சமயம் நீதி தெரியாது; நியாயம் விளங்காது; நடு நிலைமை தோன்றாது; தமக்கு வரும் ஆபத்தே தோன்றாது; முன்யோசனை யடியோடு அழிந்துபோம்; இராக்ஷச குணம் ஒன்றே தலையெடுத்து நிற்கும். ஆகையால் தங்கம்மாள் அவ்வாறு கூறியதைக் கேட்டபின்னும் பாப்பம்மாள் சற்று நிதானித்துச் சிந்தித்தவளல்ல. கோபாவேசத்தால், "அவள் மேகத்தின்மேலேறியா சவாரி செய்வாள்! அதற்குப் பதில் ஒரு பிப்பாயில் உருண்டுபோகும்படி என் கண்ணால் பார்க்கப்போகிறேன். அந்த வாகனந்தான் அவளுக்குச் சரியான வாகனம்" என்றாள்.

அக்காலத்தின் அத்தேசத்தின் சில பாகங்களில் நாம் மேலே கூறியபடி குறி சொல்கிறவர்கள், பேயோட்டுகிறவர்கள், எந்திரம் எழுதிக் கட்டுவோர் ஆகிய இப்படிப்பட்டவர்களையெல்லாம் பேயோடு நட்புடையவர்களென்று கருதி மிக்க குரூரமாகச் சித்திரவதை செய்வதும், ஒரு இரும்புக் கம்பத்தை நாட்டி அவர்களை யதிற் சங்கிலியால் கட்டி சுற்றி விறகடுக்கித் தீயிட்டெரித்துவிடுவதுமுண்டு. அவர்கள் செய்யும் சித்திர வேதனைகளில் அவர்கள் உள்ளே கூர்மையான முட்கள் நாட்டப்பட்ட ஒரு பிப்பாயில் போட்டு உருட்டுவதும் ஒன்றாகும். அதையே பாப்பம்மாள் கூறினாள்.

அச்சமயம் வடமேற்குத் திக்கிலிருந்து மும்முரமான காற்று வீசத்தொடங்கியிருந்தது. நாகம்மாள் கோபாவேசத்தோடு பேசிய பாப்பம்மாளை மறுபடி மிக்க அலட்சியத்தோடும் வெறுப்போடும் உற்று நோக்கிவிட்டு வட

மேற்கு திக்கை நோக்கியிருக்கும் சாளரத்தின் எதிரில் சென்று நின்று தன் கரங்களை மார்பின்மேல் கட்டிக் கொண்டு சற்றுநேரம் வானத்தை நோக்கியபடி யிருந்தாள். அத்திக்கிலிருந்து காற்று இடையிடையில் வேகமாய் அடிக்க ஆரம்பித்தது. வரவரக் காற்றின் பயங்கரமான வேகமும் சுழற்சியும் மிக்க அதிகமாகத் தொடங்கின.

காற்றும் மழையும் உக்கிரமாக வீசியது பார்ப்பவர்க்குப் பயங்கரமாகவிருந்தது. ஆனால் நாகம்மாள் குழந்தைகளின் விளையாட்டைத் தாய்தந்தையர் பார்ப்பதுபோல் அவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனால் அவள் முகத்தில் ஒருவித உற்சாகமும் அதிகாரமுமாகிய குறியிருந்தது. அவள் முகத்தில் பயங்கரமான தோற்றமுமிருந்தது.

இச்சம்பவத்தைக் கண்ட முருகப்பன் தங்களுக்கிருக்கும் ஆபத்தை யுணர்ந்தானெனினும், இதென்னவென்பதை யுணர மிக்க ஆவலுடையவனானான். அவன் பீதியொருபுற மடங்கியது. அவன் நாகம்மாளைப்பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறான். இப்போது அதனுண்மையை யறியத் தக்க சந்தர்ப்பம் அவனுக்கு வாய்ந்திருக்கிறது.

எல்லப்பன் நாகம்மாளின் சங்கதிகளைக் கேட்டபோது அவளுக்கிருக்கும் வல்லமையையுணர்ந்து பிரமிப்படைந்துவிட்டான். உண்மையில் அவன் மிக்க பீதியும் நாகம்மாளின் சக்திகளைப்பற்றி யறிய அதிக ஆவலுமுடையவனாய்விட்டான். அவனுடைய தங்கையாகிய பாப்பம்மாளுக்கு அத்தகைய ஆவலொன்றுமில்லை. அச்சமயம் அவள் முகத்தில் இருந்த குறியால் அவள் மிக்க கோபமடைந்திருக்கிறாளென்பதும், பீதியடையவில்லை யென்பதும் விளங்கின. ஹாக்கருக்கும், தங்கம்மாளுக்கும்

நாகம்மாள் இந்த வீட்டிலிருக்கிற வரையில் அவ்வீட்டிற்கு எவ்வித ஆபத்தும் வராதென்று நம்பிக்கையுண்டு. ஆதலால் அவர்கள் பீதியின்றி, நாகம்மாள் அங்கிருந்து புறப்பட்டால் கூடவே செல்வதற்காக ஆயத்தமா யிருந்தார்கள்.

நாகம்மாள் வானத்தின் வடமேற்குத் திக்கை நோக்கியபடி உற்று நோக்கிக்கொண்டே யிருந்தாள். அதன் பின்பு தன்னிடமிருக்கும் மாத்திரைக்கோலை வானத்தை நோக்கி நீட்டிக்கொண்டு வடநாட்டுப் பாஷையில் உச்சாடன மந்திரம்போன்ற ஏதோ பாக்களைக் கூறினாள். அந்த உச்சாடனம், காற்றையும் மழையையும் இடி மின்னலையும் கோபமடங்கிச் சாந்தமாயிருக்கவேண்டுமென்ற வேண்டுகோளை யுடையது.

முருகப்பன் அத்தகைய விஷயங்களில் மிக்க பிரியமுள்ளவன். ஆகையால் நாகம்மாள் காற்று, மழை, இடி, மின்னல்களைக் கோபமடங்கும்படி வேண்டிக்கொள்ளும் பாட்டுகளை மிக்க உற்சாகத்தோடு கவனித்துக் கேட்டான். அவன் அவ்வளவு காலமாய் வசித்த அந்நாட்டின் மந்திர உச்சாடனங்களைக் கேட்டிருந்தாலும், இந்த நாகம்மாளுடைய மந்திரசக்தியின் முன் மும்முரமாய் அடிக்கும் புயற்காற்றும் மழையும் அடங்கிவிடும் என்றும் கருதக்கூடிய நம்பகம் அவனுக்குள் இச்சமயம் உண்டாகவில்லை.

ஆனால் உண்மையில் காற்றும் மழையும் கொஞ்சங் கொஞ்சமாக அடங்கவே தொடங்கிவிட்டன. ஆயினும் நாகம்மாளுக்கு இக்காற்று மழை எப்போதடங்குமென்ற விஷயம் நெடுநாள் அனுபவத்தால் தெரியுமாதலால் அதையுணர்ந்தே யிவள் இப்படிச்செய்யலாகும் என்ற ஒரு யோசனையும் அவனுக்குதித்தது. அதோடு அவளுடைய கம்பீரமான தோற்றமும், சுருண்டு தொங்கும் கூந்தலும்,

அதிகாரத்தோடு கூடிய மொழிகளும், இவ்வுலகிலுள்ள ஜெந்துக்களை யொருவர் அதிகாரத்தோடு அடக்குவது போல் அவள் காற்றின்மேலும் மழைமின்னல் இடி இவற்றின்மேலும் செலுத்தும் அதிகார வார்த்தைகளும், இவள் அவற்றைத் தன் இஷ்டப்படி நடக்கும்படி செய்யச் சக்தியுடையவளே யென்று பிறர் நினைக்க இடந்தருகின்றன.

ஹாக்கருக்கும் வேலைக்காரியாகிய தங்கம்மாளுக்கும் ஒரு காரணமும் வேண்டியதில்லை. ஏனெனில் நாகம்மாளைப் பற்றி யவர்கள் நன்றாயறிந்திருக்கிறார்கள். எல்லப்பனும் அவன் தங்கையும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்து விழித்தார்கள். அதிலும் நாகம்மாள் மந்திர உச்சாடனம் செய்த பின் காற்றும் மழையும் கொஞ்சங் கொஞ்சமாய் அடங்குவதைக்கண்டதே அவர்களுக்கு அதிக கலக்கமுண்டாய்விட்டது. அதன்பிறகு சற்றுநேரம் யாவரும் பேசாமல் இருந்தார்கள். நாகம்மாள் முன்னிலும் சாந்தமான இன்னொரு மந்திரம் உச்சாடனம் செய்தாள். எல்லப்பன் தன் தங்கையை நோக்கி "நாம் இம்மாதிடம் நல்லதனமாகவே சம்பாஷிக்கவேண்டும்" என்றான்.

நாகம்மாள் அவர்கள் உள்ளத்திலுள்ள உணர்ச்சியை யறிந்தவள்போல் எழுந்துசென்று அங்கு மேஜைமேலிருந்த அற்ப ஆகாரத்தில் இரண்டு துண்டு அப்பமும் கொஞ்சம் நீரும் மட்டும் பருகியபின் "உங்கள் ஆகாரத்தை யுண்டதற்காக நான் உங்களுக்கு வந்தனமளிக்கமாட்டேன். அளிக்கவேண்டிய அவசியமில்லை." என்று கூறிக்கொண்டே தன் மடியிலிருந்த ஒரு பழைய பையை யெடுத்து அதிலிருந்து ஒரு புராதனமான பொன் நாணயத்தையெடுத்து மேஜைமேல் வைத்து,

"இதோ நீங்கள் அளித்த உணவிற்குக் காசு. நான் உங்கள் உணவை விருந்தாளிக்களிக்கப்பட்ட உணவாக

ஏற்றுக்கொள்ளமுடியாது. ஏனெனில் நீங்கள் மனப்பூர்வமாக எனக்கு நல்வரவுகூறி இந்த உணவை யளிக்கவில்லை. ஆகையால் நான் உங்களுக்கு வந்தனமளிக்கவும் மாட்டேன். வாழ்த்துகூறவும் மாட்டேன். நான் அப்படிக் கூறினும் அவற்றால் பயனுண்டாகாது. பாலை வனத்தில் குளிர்ச்சி பொருந்திய மழைத்திவலைகள் வீழ்ந்தாலும் என்ன பயன்? அத்திவலைகளால் பயனடையக்கூடியவை யங்கொன்றுமேயில்லை. அவ்வாறே இங்கும் என் ஆசீர்வாதங்களுக்கும் பயனின்றிப்போம்" என்றாள்.

அவள் அளித்த பணத்தை யெடுத்துக்கொள்ள எல்லப்பனும், அவன் தங்கையும் பிரியப்படாமல் மன்றுடினார்கள். எல்லப்பன் அந்தப்பொன் நாணயத்தை யெடுத்துப்பார்த்து அச்சத்தோடு தன் தங்கையிடமளித்தான். அவள் அதை வாங்கிப்பார்த்ததும் பீதியடைந்தாள். நாகம்மாள் அவர்கள் எண்ணத்தை யறிந்துகொண்டவளாய் "ஆம் இப் பொன்காசு, தன்னை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு நன்மை செய்வதுபோல் தீமையும் செய்யும். இதை மனப்பூர்வமாக இரக்கத்தோடும் உதாரண குணத்தோடும் செலவு செய்பவர்களுக்குச் சுகத்தையும் க்ஷேமத்தையும் அளிக்கும். பிசினரித்தனத்தோடு இரக்கமின்றி அதிதிகளுக்கு உபசரணை செய்யப் பின்னிடைகிறவர்களுக்கு இது நன்மையளிக்காது" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டதே எல்லப்பனும், அவன் தங்கையும் மிக்க பீதியடைந்து விட்டார்கள். எல்லப்பன் நாகம்மாளை இரவு இங்கேயிருந்து போஜனமருந்தும்படி கேட்டுக்கொள்ளலாம் என்று கருதினன். ஆனால் சமைக்கப்பட்டிருப்பது ஒரு வாத்து-நம்போல் மேல்நாட்டார்க்கு அன்னம் முக்கிய ஆகாரமல்ல. அவர்கள் இராக்ஷஸ கணமார்தலின் மாமிசம் மது இரண்டுமே அவர்களுக்கு முக்கிய

உணவு. அவற்றோடு ரொட்டி முதலியவையும் அன்னிய பதார்த்தங்களும் இருப்பது நமக்குச் சாதத்தோடு பதார்த்தங்கள் இருப்பது போலவாகும். அதனால் ஒரு வார்த்தை வைத்துக்கொண்டு இவர்களையெல்லாம் இங்கிருந்து போஜனம் செய்யும்படி எப்படிக் கூறுவதென்று தடுமாற்றத்தோடு பேசாமலிருந்துவிட்டான்.

மறுபடி பார்த்தான்; பேசாமலிருப்பதும் மரியாதையாகத் தோன்றவில்லை. ஆகையால் அவன் "யாவரும் இங்கிருக்கும் ஆகாரத்தைக் கொஞ்சங் கொஞ்சமாவது அருந்திச்செல்ல வேண்டிக்கொள்கிறேன்" என்றான்.

இவர்கள் உள்ளத்தை அங்கை நெல்லிபோல் அறியும் வல்லமையுடைய நாகம்மாள் "நான் இங்கு ஆகாரம் புசிக்கமாட்டேன்; இந்த வீட்டில் இரவு நித்திரை செய்ய மாட்டேன். ஆனால் உங்களுக்கொரு உபகாரம் செய்கிறேன். அதாவது இங்கு வந்திருக்கும், உங்களுக்கு விருப்பமில்லாத விருந்தினர்களை யிங்கிருந்துபோகச் செய்கிறேன்" என்று கூறிவிட்டு முருகப்பனை நோக்கி,

"முருகப்பா! உன் தந்தையின் உன்மத்தகுணம் போய்விட்டது. அவர் உன்வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்." என்றாள்.

முருகப்பன்:—"நீ அந்தத் திக்கில்தான் செல்கிறாயோ? நான் சீக்கிரத்தில் கொஞ்சம் ஆகாரம் அருந்திவிட்டு வந்து விடுகிறேன். உனக்குத்துணையாய் இருந்து உன்னை அழைத்துக்கொண்டு செல்வேன். இதுவரையில் வழியிலுள்ள சிற்றாறுகளின் வெள்ளம் அதிகமாகவிருக்கும் ஆகையால் அவ்வழியில் பிரயாணம் செய்வது மிக்க ஆபத்து" என்றான்.

நாகம்மாள்.—"நீ யொரு வழி செல்கிறாய்; நான் ஒரு வழி செல்கிறேன. எனக்கு வழிப்பிரயாணத்தில் உன்

போன்ற மனிதர்களுடைய துணை சற்றும் வேண்டிய தில்லை. நான் கிழக்கே நெடுந்தூரத்திலிருப்பவர்களால் வரவழைக்கப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு என்னை எவ்வாறு நடத்தவேண்டுமென்பது நன்றாகத் தெரியும்" என்று கூறிவிட்டு வந்திருக்கும் ஹாக்கரை நோக்கி,

"ஓ! சுந்தரம்பிள்ளை! நீ நேராகச் சம்புமுனைக்குச் செல். அங்கே உனக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும். அங்கு கப்பற்சேதத்தால் கரையில் எறியப்படும் பொருள்களில் உனக்கு ஏராளமானபொருள் கிடைக்கும். கப்பலின் சொந்தக்காரனும் மற்றவர்களும் கடலினடியிற் போய் விடுவார்களாதலின் கப்பலின் சொத்துக்கள் கரையில் போய்ச் சேர்வதைக் கவனிப்பவர் ஒருவருமிரார்—" என்றாள்.

ஹாக்கர் சுந்திரம்பிள்ளை:—"அம்மையாரே! பிறர் இறந்து போய் அதனால் நாம் பொருள் சம்பாதிக்கவேண்டுமென்ற பேராசை யுண்மையாகவே யெனக்கில்லை. கடவுள் சரியான வழியில் எனக்களிக்கும் சொல்ப வருமானத்திலேயே நான் திருப்தி யடைந்திருக்கிறேன். ஆனால் இவ்வுலகில் ஒருவனுடைய நஷ்டம் மற்றொருவனுடைய இலாபமாகவிருக்கிறது பிரத்தியட்ச அனுபவம். இத்தகைய கொடிய புயற்காற்று கரையில் நமக்கு மிக்க நஷ்டத்தை யுண்டாக்குகிறது. ஆகையால் இது கடல் வழியாய் நமக்குக் கொஞ்சம் இலாபம் அளிக்கவேண்டியது நியாயமே. ஆகையால் உன்னைப்போல் நானும் இங்கிருக்கும் ஆகாரத்தில் கொஞ்சம் புசித்து விட்டு ஜலபுரத்தை நோக்கிச் செல்கிறேன். (சம்புமுனை ஜலபுரத்தினருகிலுள்ள துறைமுகம்)—" என்றான்.

நாகம்மாள்.—"அப்படியல்ல; எங்கே கொலை நடக்கிறதோ அங்கு கழுகுகள் போய்ச்சேர்கின்றன. அதுபோல் எந்தக் கடற்கரையில் கப்பற்சேதம் நேர்கிறதோ அங்கு கரையில் ஒதுக்கப்படும் பொருள்களை வாங்க ஹாக்கர்கள் ஓடுகிறார்கள்—" என்றாள்

சுந்தரம்பிள்ளையும் பணம் சம்பாதிப்பதில் ஆசையுடையவனே ஆகையால் நாகம்மாள் கூறியது நமக்கு அகௌரவத்தை யுண்டாக்கும் வார்த்தையே யென்று அவன் புத்தியிற்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவன் மந்தபுத்தி யுடையவனானது பற்றி அது அந்தரத்தில் அவன் புத்தியிற்படவில்லை. அவன் முருகப்பனை நோக்கி "நீ யந்தப்பக்கம்தான் வருகிறாயோ?" என்று வினவினான்.

முருகப்பன் "நான் இந்த வீட்டுக்காரரோடு கொஞ்சம் ஆகாரம் புசித்துவிட்டு இன்னும் அரைமணிநேரத்தில் இதைவிட்டுப் புறப்படுவேன்" என்றான்.

சுந்தரம்பிள்ளை "அப்படியாயின் நான் என் சொற்ப ஆகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு செல்கிறேன்" என்று கூறிவிட்டு அங்கிருந்த உணவுப்பொருள்களில் இருவர்க்குப் போதுமான அவ்வளவு ரொட்டி முதலியவற்றை யெடுத்துக் கட்டிக்கொண்டு "எல்லோர்க்கும் வந்தனம்" என்று கூறிக்கொண்டே அங்கிருந்து புறப்பட்டு விட்டான். அவன் போன்ற ஹாக்கர்கள் எப்போதும் கொஞ்சம் தாகத்திற்குச் சலம் வேண்டுமென்று முதலிற் கேட்டதும் பிறகு பூரணபோஜன மருந்துவதும் அத்தீவில் வழக்கம்.

---

## 10-வது அத்தியாயம்.

ஹாக்கர் சுந்தரம் பிள்ளை அவ்வாறு ஆகாரத்தில் பெரும்பாகத்தை யெடுத்துச் செல்வதைக் கண்ட பாப்பம்மாள் மனம் துடிதுடித்துவிட்டது. எப்போதும் உலோபிகளுக்குத் தங்கள் பொருளைப் பிறர் கைப்பற்றுவதைவிடக் கொடிய நரக வேதனை வேறொன்று மில்லை. அவள் ஆத்திரத்தோடு "அந்தோ! இதென்ன அநீதம்! இப்படிப்பட்ட வழிப்பறிக்கொள்ளைக்காரரைத் தடுக்க நம் நாட்டில் ஒரு சட்டமில்லாவிடின், நாணயமும் யோக்கியமுமுடைய பிரயாணிகளைக்கூட நாம் உள்ளே சேர்ப்பதற்கு அஞ்சவேண்டியதே" என்று கூறிக் கொண்டே முருகப்பனைக் குறிப்பாய் நோக்கினாள்.

முருகப்பன் உள்ளே வெறுப்போடு நகைத்துக் கொண்டே நாகம்மாள் எங்கேயென்று நோக்கினான். அவள் எங்கும் காணப்படவில்லை. ஹாக்கர் விஷயம் நடந்துகொண்டிருக்கையிலேயே அவள் எப்படியோ அங்கிருந்து நழுவிவிட்டாள். முருகப்பன் நாற்புறங்களிலும் நோக்கிவிட்டு "எங்கே அம் மூதாட்டியைக் காணோமே" என்றான்.

பாப்பம்மாள் "அவள் ஒழிந்தால் நம்மைப் பிடித்த சனி விட்டமாதிரியே. அவள் போனது எனக்குச் சந்தோஷமே. ஆனால் நமது அவமானத்திற்குத் தன் பொற்காசை இங்கு வைத்துவிட்டுப் போயிருக்கிறாள்" என்றாள்.

வேலைக்காரியாகிய தங்கம்மாள் ஆத்திரத்தோடு "அம்மா! உன் புண்ணியத்திற்கு அவசரப்பட்டு ஒன்றும் கூறிவிடாதே. இந்த விநாடியில் அந்த மூதாட்டி எங்கிருக்கிறாள் என்பது உனக்குத் தெரியாது; நாம் அவள் உரு

வத்தைக் காணுவிடினும் நமது சம்பாஷணையை யவள் கேட்கவில்லையென்று கூற ஒருகாலும் முடியாது" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டதே பாப்பம்மாள் கலவரமடைந்துவிட்டாள். மிரண்ட பார்வையோடு நாற்புறங்களிலும் நோக்கினுள். ஆனால் அதற்குள் அவளுடைய இயற்கையான முரட்டுத் தைரியம் வந்துவிட்டது. அதன்மேல் அவள் ஆத்திரங்கொண்டு "நான் முன்னமே யவளை வீட்டைவிட்டுப் போகச்சொன்னேன். இப்போதும் அப்படியே கூறுகிறேன். நான் கூறும் மொழிகளை யவள் கேட்டாலும் சரி, கேட்காவிட்டாலும் சரி, அவள் வெளியில் மறைந்திருந்தாலும் சரி, என் அருகிலேயே யிருந்தாலும் சரி" என்று கூறிவிட்டுத் தன் தமையனை நோக்கி,

"நீ யென்ன இத்தகைய கோழைப் பயலாகிவிட்டாய். பிரபல குருவிடம் எவ்வளவோ பாடங் கேட்டாய், என்னென்னமோ வாசித்தாய், கடைசியில் மந்திரக்காரிக்கும், சூனியக்காரிக்கும் அஞ்சி நடுங்குகிறவனு யிருக்கிறாய். அவள் இங்கு வைத்துவிட்டுச் சென்ற பணத்தைப்பற்றி எனக்குச் சற்றும் அச்சமேயில்லை. அதை யெந்தப் பிச்சைக்காரனுக்கேனும் நான் தானம் செய்துவிடுவேன். அப்படி யொருவரும் வாங்கமாட்டேனென்றால் என் மரணசாசனத்திலேனும் அதை யொரு தருமவிஷயத்திற்கு அளிக்கும்படி எழுதிவைப்பேன். நீ கடவுளைப் பிரார்த்தி. நாம் போஜனம் செய்வோம்" என்றாள்.

பிறகு அவர்களுக்குள் சொல்ப சம்பாஷணை நடந்தது. எல்லப்பன் தன் தங்கையின் லோபகுணத்திற்கு முன் ஒன்றும் செய்ய முடியவில்லை. கடைசியில் யாவரும் உட்கார்ந்து போஜனம் செய்தார்கள். அவர்கள் நாட்டு ஆசாரப்படி போஜனம் முடிந்ததும் சாராயம் வட்டிக்கப்பட்

டது. முருகப்பன் அதையருந்தவில்லை. போஜன சமயத்தில் நடந்த சம்பாஷணையில் முருகப்பனுடைய விஷயங்களைப்பற்றியும், அவன் தந்தையின் குணங்களைப்பற்றியும் எல்லப்பனும் அவன் தங்கையும் அதிகமாக அறிந்தார்கள்.

பாப்பம்மாள் முருகப்பனை நோக்கி "நீ இந்த இரவு இங்கேயே தங்கி, நாளைக்காலைப் போசனம் அருந்திவிட்டுச் செல்லலாம்" என்று மிகுதியும் வற்புறுத்திக் கூறினாள். முருகப்பன் அதற்குச் சம்மதிக்கவில்லை. ஏனெனில் நாகம்மாள் அவன் விஷயத்தைப்பற்றிக் கூறியது அவன் நினைவிலிருந்தது. அதோடு தன் தந்தையின் புத்தி சபலம் நீங்கிவிட்டதென்று அவள் கூறியதால் அங்குப்போய்ச் சீக்கிரம் அவரைக் காணவேண்டுமென்ற ஆவலும் அவனுக்குண்டாயிற்று. அவனுடைய நனைந்த உடைகள் இன்னும் உலரவில்லையேனும், அவன் எல்லப்பனுடைய உடையை இரவலாக வாங்கிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டான்.

பாப்பம்மாளுக்குப் பாபம் தன் வாத்து செலவழிந்துவிட்டது ஒரு பக்கம் விசனமே. நான்கைந்து பேர்களுக்குள் ஒரு வாத்து எம்மாத்திரம். அதன் எலும்பில் ஒன்றுகூட மிஞ்சியிராது. ஆயினும் முருகப்பன்மேல் அவளுக்குண்டான வாஞ்சையாலும், அவன் குடும்பம் சற்று நிம்மதியானதென்று கேள்விப்பட்டதாலும் அந்த வாத்துச் செலவானதைப்பற்றி யுண்டான மனவெரிச்சலை அவனுக்காக ஒருவாறு தணித்துக்கொண்டாள்.

*　　*　　*　　*　　*

சோரனூருக்கும் ஜலபுரத்திற்கும் பூராவாகப் பத்து மைல்கள் இருக்கின்றன. வழியோ மிகக் கஷ்டமானது. ஆயினும் முருகப்பன் ஒரு இடையூறுமின்றி ஜலபுரம் போய்ச்சேர்ந்தான். அப்போது பொழுதமர்ந்து எங்கும் இருள்சூழ்ந்துகொண்டது. மாளிகைகள் எல்லாம் நிர்ச்சந்

நடியாக விருந்தது. முருகப்பன் இருமுறை மும்முறை வீட்டுக்காரியஸ்தியாகிய சுந்தரம்மாளின் அறைக்கு நேராய்ச் சென்று நின்று சீட்டையடித்தான். பிறகே அவள் அச் சத்தத்தைக் கேட்டதாகத் தெரிந்தது.

சுந்தரம்மாள் மூன்ருவது சீட்டையைக் கேட்டபின் எழுந்துபோய்ச் சாளரத்தருகில் நின்று "யாரது?" என்ருள். முருகப்பன் நான்ருன் என்றதே அவள் "என் உள்ளே வரலாமே; வெளிக்கதவின் தாழ்ப்பாள் இன்னும் போடப்படவில்லை. நெகிடித்தீ யணைக்கப்படவில்லை" என்ருள்.

முருகப்பன்:—அதெல்லாம் சரிதான். என் தந்தை யெப்படி யிருக்கிருர் என்பதை முன்னே யறியவேண்டும்.

சுந்தரம்மாள் :—நன்ருகவே யிருக்கிருர்; உன்னைக் கேட்டுக்கொண்டே யிருக்கிருர். நீ சென்று மிக்க ஆலசியமாய் வந்தாய்.

முருகப்பன் :—அப்படியாயின் அவருடைய புத்தி சபலவேளை போய்விட்டது?

சுந்தரம்மாள் :—"ஆம். போய்விட்டது. அவர் நிலைமைக்குப் பாபம் இப்போது மிக்க சாந்தமாகவே யிருக்கிருர் என்று கூறுவேன். நேற்று அவர் பேசாமலே யிருந்தாலும் இருமுறை நான் வலியப்போய் அவரிடம் பேசினேன். அவர் முதல்முறை மிக்க சாந்தமாகவே பேசினர். மறுமுறை 'என்னைத் தொந்திரை செய்யவேண்டாம்' என்ருர். நான் மறுபடியும் பேச முயன்றபோது 'நீ யொரு வாயாடிப்பேய்' என்ருர். ஆனல் பூரணமான மரியாதையாகவே கூறினர்" என்ருள்.

முருகப்பன்:—"அம்மா! போதும் போதும். இப்போது எழுந்துபோய் எனக்கு ஆகாரம் ஏதேனும் கொண்

டுவா. நான் சரியாய்ப் புசிக்காததால் பசியோடிருக்கிறேன்'' என்றான்.

சுந்தரம்மாள் :—"அப்படியாயின் நீ சோரனூரிலிருக்கும் எல்லப்பன் வீட்டிற்குச் சென்றிருக்கவேண்டும். இத்தீவு முழுமையிலும் அந்த ஒரு வீட்டார்தான் வருகிறவர்களுக்குத் திருப்தியான ஆகாரமளிக்கமாட்டார்கள். அவர்களுடைய உலோபத்தனம் நாடறிந்தவிஷயம். அந்த எல்லப்பன் என்பவன் பிச்சிமலை நாகம்மாள் என்பவளைக் கண்டிருக்கிறானா? அவள் சோரனூருக்குச் சென்றிருந்து இரவு இங்கு வந்துவிட்டாள்'' என்றாள்.

முருகப்பன் அம்மொழிகளைக்கேட்டதே வியப்புற்று "என்ன! இரவே இங்கு வந்து விட்டாளா? இப்போது இங்கா இருக்கிறாள்?'' என்று ஆவலோடு வினவினான்.

சுந்தரம்மாள் "ஆம்'' என்றதே வாலிபன் "என்ன? இவ்வளவு சீக்கிரத்தில் பத்துமைல் தூரத்திற்கு வந்து விட்டாள்?'' என்றான்.

சுந்தரம்மாள்:—"அவள் பிரயாணம் செய்வது இன்ன விதமாகவென்பது யாருக்குத்தெரியும்? அவள், தான் வசந்த மாளிகைக்குச்சென்று மீனாட்சியம்மாளைக் கண்டு பேச எண்ணியிருந்ததாகவும், ஆனால் சோரனூரில் கண்ட சில சம்பவங்களால் அங்குச் செல்லாமல் நம்மூருக்கு வந்ததாகவும், கடைக்காரனிடம் கூறிக்கொண்டிருந்ததை நான்காதாரக் கேட்டேன். நீ போசன அறைக்குவா. நம் வீட்டில் எப்போதும் வயிறார உண்ண உணவு ஆயத்தமாகவே யிருக்கும்'' என்றாள். அவன் அவ்வாறே அந்த அறைக்குச் சென்றதும் சுந்தரம்மாள் அவனுக்குத் திருப்தியான ஆகாரம் வட்டித்தாள்.

மறுநாள் காலை முருகப்பன் சற்று நேரங்கழித்தெழுந்ததால் தன் தந்தையை அவர்கள் போசனம் செய்யும் அறையில் சந்தித்தான். அவன் தன் தந்தைக்கு வந்தனமளித்ததே தந்தை அவனை நோக்கி "முருகப்பா! நேற்று நீ யிங்கில்லை" என்றான். உண்மையில் முருகப்பன் வீட்டை விட்டுச்சென்று ஒரு வாரமாய் விட்டது. தன் தந்தைக்கு இடையிடையில் காலத்தின் அளவு தெரியாமற் போகிறதென்ற விஷயம் அவனுக்குத் தெரியும். ஆகையால் அவன் தன் தந்தை கூறியதற்கு ஆம் என்று ஒப்புக்கொண்டான்.

**தந்தை:**—"அப்படியாயின், நீ வசந்த மாளிகைக்குச் சென்றிருந்தாயென்று நினைக்கிறேன்" என்றான்.

**முருகப்பன்:**—"ஆம் அப்பா" என்றான். மார்க்கசேனன் அதன் பின் சற்றுநேரம் பேசாமலிருந்தான். அவன் ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான் என்பது தோன்றியது. ஒரு சமையம் பழைய நிலைமைக்கு வந்து விடுபவன்போலும் தோன்றினான். பின்னர் அவன் திடீலென்று தன் புத்திரனை நோக்கி ஒரு கேள்வி கேட்பவன்போல் "தைரிய நாதனுக்கு இரண்டு பெண்களிருக்கிறார்கள். இப்போது அவர்கள் வாலிபக் கன்னிகைகளாக விருக்கவேண்டும். அவர்கள் நல்ல அழகிய பெண்களாகவே யிருப்பார்கள்?" என்றான்.

முருகப்பன் தன் தந்தையின் வார்த்தைகளைக்கேட்டு வியப்படைந்து "பெரும்பாலும் இருக்கலாம்" என்றான்.

**தந்தை:**—"அந்த இரண்டு பெண்களில் யார் அதிக வனப்புடையவள் என்று நீ கருதுகிறாய்?" என்றான். இந்த எதிர்பாராக் கேள்வியைக் கேட்ட முருகப்பன் திகைப்படைந்து, "என்ன அப்பா! நானா? நான் அவ்வளவு அறியும் சக்தியுடையவனல்ல. எனக்கிரு

வரும் அழகுடையவர்களாகவே தோன்றுகிறார்கள்'' என்றான்.

**தந்தை:**—''நீ என் கேள்விக்கு விடையளிக்காமல் தப்பித்துக் கொள்கிறாய். இந்த விஷயத்தில் உன் அபிப்பிராயத்தை யறிவதற்கு எனக்குள் விசேஷ காரணம் ஏதேனுமிருக்கலாகும். நான் வியர்த்தமான வார்த்தைகளைப் பேசுகிற வழக்கமில்லை. ஆகையால் நான் மறுபடி கேட்கிறேன். என் கேள்விக்கு நேராய் விடையளி. அந்த இரண்டு பெண்களில் நீ யாரை அதிக வனப்புடையவளாகக் கருதுகிறாய்? உண்மையை, உன் மனதிலிருக்கும் அபிப்பிராயத்தைக் கூறு'' என்றான்.

இதைக்கேட்டதே முருகப்பனுக்கு மிக்க கலக்கமுண்டாகிவிட்டது. தன் தந்தையின் உள்ளக்கருத்து என்னமோ விருக்கிறதென்று அவனுக்குப் புலப்பட்டது. ஆனால் அது இன்னதென்று விளங்காததால் அவன் மனக் கலக்கம் அதிகமாய் விட்டது. அவன் தன் தந்தையை நோக்கி,

''அப்பா! நான் உண்மையே கூறுகிறேன். தாங்கள் ஏதோ வேடிக்கையாகப் பேசுவதாகத்தெரிகிறது'' என்றான்.

**தந்தை:**—நான் ஒருபோதும் வேடிக்கை அல்லது கேலிப் பேச்சுப் பேசுகிற வழக்கமேயில்லை. ஆகையால் நீ என் கேள்விக்கு நேர் பதில் அளிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

**முரு:**—அப்படியாயின் நான் உண்மையே கூறுகிறேன். அந்த இரண்டு பெண்களில் யார் அதிக அழகுடையவளென்று கண்டு தெளிய என்னால் முடியாது. அவர்

கள் இருவரும் அழகுடையவர்களே. ஆயினும் ஒரு வரைப்போல் ஒருவர் இல்லை. மீனாட்சி கரிய கூந்தலை யுடையவள். தன் சகோதரியைவிட மிக்க அடக்க மானவள். ஆனால் சகோதரியைப்போல் மந்த புத்தி யும் உற்சாகமற்ற தன்மையும் உடையவளல்ல.

**தந்தை:**—ஆம்; இந்த மீனாட்சியின் விஷயத்தில்தான் உன் மனம் பிரியம் கொண்டிருக்கிறது.

**முரு:**—அப்பா! உண்மையில் அப்படியில்லை. எப்போதும் சந்தோஷமாகவும் உல்லாசமாகவும் இருக்கும் அவள் சகோதரியாகிய புனிதத்தைவிட மீனாட்சி விசேஷம் என்று நான் கூறமாட்டேன்; ஆனால் புனிதம் மீனாட்சியைவிடக் குட்டை. நடனத்தில் மேலான வள்.

**மார்க்கசேனன்:**—"அப்படியாயின் அத்தகைய கன்னிகை மனச்சோர்வுடைவனும், உறக்கம் பிடித்த தந்தையை யுடையவனுமாகிய ஒருவனுக்குத் தகுந்த மனைவி யாவாள்" என்றான்.

தன் தந்தையின் சுபாவமான சம்பாஷணைக்கு முற் றும் மாறான இச்சம்பாஷணையைக் கேட்ட முருகப்பன் மிக்க வியப்படைந்து விட்டான். ஆயினும் மறுபடி முன் போலவே, "இரண்டு கன்னிகைகளும் புகழ்ச்சிக்குரியவர் களே. ஒருவரை யுயர்வாகவும் ஒருவரைத் தாழ்வாகவும் கூறுவது இருவரில் ஒருவரை யகௌரவப் படுத்தியதாகும். அன்னியர் அப்படிக் கூறலாகும். என்வரையில் ஒருத்தி யிடம் ஒரு விஷயத்தில் உயர்வான குணமிருப்பதுபோலவே மற்றவளிடத்தில் இன்னொரு விஷயத்தில் உயர்வான குண மிருக்கிறதென்பது தெரிகிறது" என்றான்.

இந்தச் சமாதானம் தந்தைக்குத் திருப்தியளிக்கக் கூடியதல்ல; இதைப்பற்றி அவன் ஏதேனும் கூறுவதற்குள்

போசனம் வட்டிக்கப்பட்டதால் இருவரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். மார்க்கசேனன் தன் புத்திரனை நோக்கினான். அவன் முகத்தில் களங்கமற்ற தன் மையே யிருந்தது. துயரமாவது மனச்சோர்வாவது கலக்கமாவது இல்லை. அவன் வியப்போடு "அடடா! இந்த வயதில், இத்தகைய வனப்பும் வசீகரமுமான உருவமுடைய ஒரு வாலிபன், உலகில் எத்தகைய மனிதரும் சிக்கிக் கொள்ளும் பெண்களின் மாயவலையில் சிக்காமல் தப்பிக்கொண்டிருப்பது மிக்க அதிசயமே!" என்று நினைத்துக்கொண்டான்.

போசனம் முடிந்ததும் மார்க்கசேனன் வழக்கம் போல் தன் அறைக்குச் செல்வதை விட்டுத் தன் புத்திரனை நோக்கி "நாம் சம்புமுனைக்குப் போவோம் வா" என்றான். இரவு அடித்த புயற்காற்றின் குறி அப்பொழுதும் கடலின் கொந்தளிப்பிலும் அலைகளின் வேகத்திலும் இருந்துகொண்டே யிருந்தது. முருகப்பனுக்கு இத்தகைய சுறுசுறுப்பான விஷயங்களில் மிக்க உற்சாகமே யாதலின் உடனே துரிதமாய் எழுந்து தன் தந்தையோடு சென்றான்.

இருவரும் உடனே கடலோரம் சென்று அங்கிருந்த ஒரு சரிவான குன்றின் மேலேறி அதன் உச்சியை யடைந்தார்கள். அக்குன்று தரைப்பக்கம் சரிவாய் புல் தரையுடையதாய் மேலேறி மறுபக்கம் செங்குத்தாய்த் தட்டென்று கடலில் இறங்குகிறது. அது பார்வைக்குப் பயங்கரமான இறக்கம். அன்று வானம் பிரகாசம் பொருந்தி அழகாக விருந்தது. இவர்கள் அக்குன்றின் மேலேறிச் சென்றுகொண்டே யிருக்கையில் பாதிக்குமேல் சென்ற போது மார்க்கசேனன் களைப்படைந்தவனாகக் காணப்படவே மைந்தன் கைகொடுத்து அவனை யழைத்துச் சென்றான். ஆனால் மேலே கொஞ்சதூரம் செல்வதற்குள் மார்க்க

சேனன் தன் புத்திரனுடைய கரத்தைத் தள்ளிவிட்டுத் தான் சுறுசுறுப்போடு துரிதமாய் அவனுக்கு முன் நடந்து சென்றான். அச்சமயம் முருகப்பன் சற்று சிரமத்தோடு தன் தந்தையைப் பின்பற்றிச் செல்லவேண்டியதாக விருந்தது. கடைசியில் இருவரும் மலைச்சாரலிலிருந்த சிறு சமபூமியையடைந்தார்கள். அங்குச் சேர்ந்ததே தந்தை தன் மகனை நோக்கி,

"முருகா! இந்தத் தீவில் உன் மனதைக் கவரத்தக்க விஷயங்கள் இல்லையென்று தோன்றுகிற வரையில் உலகின் மற்ற பாகங்களைப் போய்ப் பார்க்க விரும்புவாய் என்று நினைக்கிறேன்" என்றான்.

முரு:—அப்பா! எனக்கு அத்தகைய சிந்தனை யொருபோதும் மனதில் உண்டானதேயில்லை.

தந்தை:—ஏன் உண்டாகலாகாது? உன் வயதில் இது சுபாவமான எண்ணமே யென்று நான் நினைக்கிறேன். உன் வயதில் எனக்கு இத்தகைய குறுகிய எல்லையுள்ள விடத்தில் அடங்கியிருக்க மனம் பிடிக்காது.

முரு:—"இந்தச் சத்தத் தீவைவிட்டுப் போகவேண்டுமென்ற எண்ணம் எனக்குண்டாகவே யில்லை. இங்கு எனக்கு நண்பர்களிருக்கிறார்கள். நான் சந்தோஷமாகவே யிருக்கிறேன். நான் வெளியில் போய்விட்டால் உமக்கே..." என்பதற்குள்,

தந்தை:—ஓ! நீ என்மேலிருக்கும் அன்பிற்காகவே இங்கிருக்கிறாயென்றாவது, இருக்க விரும்புகிறாயென்றாவது நான் கருதவில்லை.

முரு:—ஏனப்பா அப்படிக் கூறுகிறீர். அப்படியிருப்பதுதான் என் கடமை. நான் இது காறும் அப்படித்தான் நடந்து வருகிறேன்.

தந்தை:—ஓகோ. ஆம் ஆம். தனக்கு ஆகாரமளிப்பவன்

பின்னால்செல்வது நாயின் கடமையே; அதுபோலவே யிதுவும் கடமைதான்.

முரு:—என் அப்பா, நாய் தன் கடமையைச் செய்கிறதல்லவோ?

தந்தை:—ஆனால் அதை யார் தட்டிக்கொடுக்கிறார்களோ அவர்களிடம் மட்டுமே அன்பு காட்டுகிறது.

முரு:—நான் என் கடமையைச் செய்வதில் குறையவில்லையே.

தந்தை:—போதும் அதைப்பற்றி யின்னும் பேசாதே... நாம் ஒருவருக்கொருவர் இதுவரையில் செய்தது போதும்; நாம் சீக்கிரத்தில் பிரிந்துவிடவேண்டும். அதுவே நமக்கு நன்மை தரும்.

முருகப்பனுக்குள் உலகின் மற்றப் பிரதேசங்களைப் போய்ப் பார்ப்பதில் பிரியமே. ஆகையால் அவன் “ தந்தையே! தங்கள் கட்டளைப்படிக்கு நடக்க எனக்கு விருப்பமே. ஆனால் திமிங்கில வேட்டை நடக்கும் காலத்தில் என்னை வெளியிலனுப்ப விரும்புவீர்களென்று நான் கருதுகிறேன்” என்றான்.

அவன் மொழிகளைக்கேட்ட மார்க்கசேனன் உள்ளத்தில் வியப்படைந்து “திமிங்கில வேட்டைக் காலத்திலா? உலகைப் பார்க்கத்தொடங்குவதற்கு அதுவும் ஒரு மார்க்கமேயாகும். நீ முன்னமே யிவற்றைப்பற்றி யறிந்தவன் போல் பேசுகிறாய். இச்சங்கதியைப்பற்றிப் பேசுவது தற்சமயம் இதோடு போதும். நீ இரவு புயற்காற்றடித்த போது எங்கு அடைக்கலம் பெற்றிருந்தாய்?” என்று கேட்டான்.

முரு:—சோரனூரில் வந்திருக்கும் எல்லப்பன் என்ற ஒருவர் வீட்டில் தங்கியிருந்தேன்.

186515
சென்னை-600 008

**மார்க்க:**—ஓ அவனு ! ஒருவிதப் பகற்கனவுக்காரன்; கிடக்கட்டும். அங்கு இன்னும் யாரை நீ பார்த்தாய்?

**முரு:**—எல்லப்பனுடைய தங்கையையும் பிச்சிமலை நாகம்மாளையும் பார்த்தேன்.

**தந்தை:**—"என்ன? பிரசித்த மந்திரவாதியாகிய கிழவியையா? ஒருபக்க மடிக்கும் காற்றை மறுபக்கமடிக்கத் திருப்பி விடுகிருளாமே அவள்தானே. அவள் தன் வாசஸ்தலத்தை விட்டு நெடுந்தூரம் வந்து விடுவாள். அவள் இப்போது எப்படியிருக்கிருள்? மாலுமிகளுக்குக் காற்றை விற்று நல்ல ஊதியம் பெறுகிருளோ?" என்ருன்.

முருகப்பன் தன் தந்தையின் குணத்தைப்பற்றியும் வேறு சில காரணங்களாலும் மனம்விட்டு பேசப்பிரியமின்றி, "உண்மையில் அம்மாதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது" என்ருன்.

**மார்க்க:**—நீ அவள் விவகாரங்களைப்பற்றிக் கேலியாகப் பேசுவது கெடுதியென்று கருதுகிருயோ, அல்லது அது அற்ப விஷயமென்று அசட்டையாகக் கருதுகிருயோ எனக்குத் தெரியவில்லை. ஆனல் அதைப் பற்றி நன்ருகச்சிந்தி. உலகில் எல்லாம் வாங்கப்படுகின்றன. விற்கப்படுகின்றன. ஆகையால் காற்றையும் வாங்குகிறவர்களிருந்தால் ஒருவர் ஏன் விற்கக்கூடாது. உலகில் தேகசுகத்தையும், துக்க நீக்கத்தையும், மனே நிம்மதியையும் சரியான விலை கொடுத்து வாங்குகிருர்கள். நாகம்மாள் ஏன் தன் வியாபாரத்தைச் செய்யலாகாது.

**முரு:**—"அப்பா! அவள் ஏன் விற்கக்கூடாதென்பதற்கு எனக்கு ஒருகாரணமும் தெரியவில்லை. ஆனல் அவள் தன் பேரத்தைச் சில்லறையில் செய்தால் நன்ருக

விருக்கும். நேற்று அவள் பெரும் பேரம் செய்து கொண்டிருந்தாள்'' என்றான்.

அதற்குள் இருவரும் குன்றின் உச்சியில் போய்ச் சேர்ந்தார்கள்.

---

## 11-வது அத்தியாயம்.

அவர்கள் குன்றின் உச்சியில் நின்று பார்த்தபோது கடற் காட்சி பயங்கரமாகவே யிருந்தது. கடல், காய்ச்சும் எண்ணெய்க் கொப்பரைபோல் கொதித்துக் கொண்டிருந்தது. தந்தையும் மகனும் உச்சியில் உட்கார்ந்து கொண்டு கடலின் பயங்கரமான காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். முருகப்பனுடைய தீட்சண்யமான பார்வைக்குக் கடலில் தூரத்திலிருந்தவைகளும் புலப்பட்டன. அவன் சற்றுநேரம் கடலை நோக்கிக் கொண்டிருந்ததும் “ஓ! கடவுளே! அதோ ஒரு கப்பல் முழுகும் தறுவாயில் இருக்கிறது'' என்று கூவினான்.

மார்க்கசேனன் வடமேற்கு திக்கில் நோக்கினான்; புரளும் அலைகளில் ஒரு கப்பல் தத்தளிப்பதைக்கண்டான். உடனே தன் தூரதிருஷ்டிக் கண்ணாடியை யெடுத்துக் கண்ணில் சேர்த்துப் பார்த்து “ஒ அக்கப்பலில் பாய்மரங்களைக்காணோமே. பாய்மரக்கம்பமும் காணோம். அனாதரவாய் அக்கப்பல் கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது'' என்றான்.

முருகப்பன்:—அது சம்புமுனையின் பக்கம் அலைகளால் அடித்துக் கொண்டு போகப்படுகிறது.

தந்தை:—தப்பித்துக்கொள்ள அக் கப்பல் ஒரு முயற்சியும் செய்வதாய்த் தெரியவில்லை. பெரும்பாலும் அக் கப்

பலிலிருந்தவர்களெல்லாம் அதை விட்டுப் போய் விட்டார்களென்பது விளங்குகிறது.

முரு:—அதிலும் நேற்றடித்த புயற்காற்றில் முதல் தரமான படகோட்டிகள் கூட படகைச் செலுத்தமுடியாது. அத்தகைய காலத்தில் இக் கப்பலிலிருந்தவர்கள் படகிலேறித் தப்பித்துப்போக முயன்றால் ஒருவர் கூட தப்பிப் பிழைத்திருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம்.

தந்தை:—"ஆம். அப்படித்தான் நேர்ந்திருக்கவேண்டும். ஏறக்குறைய எல்லாரும் மடிந்தேயிருக்கவேண்டும். ஒருவரும் தன்னிடமிருந்து தப்பமுடியாத அக் கொந்தளிப்பாகிய கொலைஞன் ஒரே வலையில் யாவரையும் பிடித்துக் கொண்டாலென்ன, ஒருவரொருவராக, அல்லது இரண்டு மூன்று பேராகப் பன்முறைபிடித்தாலென்ன, எல்லாம் ஒன்றே. கப்பலின்மேல் தட்டும், யுத்தகளமும், நமது படுக்கை யறையைவிட மிக்க ஆபத்தே. நாம் ஒன்றில் தப்பித்துக்கொள்வது மற்றொன்றில் சிக்கி மாள்வதற்கே-இத்தகைய விஷயம் உனக்கு இப்போது பிரியமிராது. என் வயது உனக்கும் வந்தால் இத்தகைய சிந்தனையில் மனம் செல்வது இயற்கையாகத் தோன்றும்," என்றான்.

தன் தந்தையின் கொள்கைகள் முருகப்பனுக்குச் சற்றும் ஒப்பவில்லை. அதைப்பற்றி வாதாடினால் அவருக்குக் கோபமுண்டாகுமென்று அவன் அறிவான். ஆகையால் அவன், அச்சம்பாஷணையைச் சாடையாய் விட்டுவிட்டு, மறுபடி கடலில் தோன்றிய காட்சியில் தன் தந்தையின் மனதை யிழுக்கவிரும்பி, "ஆ! அக்கப்பல் அதோ தெரிகிறது பாரும்" என்றான். அச்சமயம் சேதமடைந்த கப்பலின் அடித்தட்டு பெரிய அலைகளால் இவர்கள் நிற்கும் பாறையை நோக்கி அடித்துக்

கொண்டு வரப்பட்டது. முன்பு தூரத்தில் ஒரு கறுப்புப் புள்ளிபோல் தோன்றியது இப்போது ஒரு கப்பலின் அடிப்பாகம் என்று நன்ருகத்தெரிந்தது. ஆயினும் அது பூரணமாய் அவர்கள் திருஷ்டிக்குத் தோன்றச் சற்றுநேரம் சென்றது. அது ஒரு பெரிய திமிங்கிலம்போல் தோன்றியது. ஆயினும் இப்போது அது உயரமாக எழும்பும் அலைகளால் மேலுக்கு வருவதும் பிறகு பாதாளத்தில் மறைவதுமாக விருந்தது. அது வரவர அருகில் வந்து கொண்டிருந்தபடியால் அது இத்தன்மையான கப்பல் என்று நன்ருகத் தெரிந்தது.

அது ஒருவிதமான யுத்தக்கப்பல். ஆனல் தற்காப்பிற்கே முக்கியமாய் தயாரிக்கப்பட்டதுபோல் தோன்றியது. அதன் பக்கங்களில் பீரங்கித் துவாரங்கள் நன்ருகத் தெரிந்தன. பெரும்பாலும் அது முன்னுள் அடித்த புயற் காற்றில் சிக்கியிருக்கக் கூடுமென்பதும், அச்சமயம் அதிலிருந்தவர்கள் அதைக் காப்பாற்ற முடியாதென்று தெரிந்து பாய்கள் பாய்மரங்கள் எல்லாவற்றையும் களைந்திருக்கக் கூடுமென்பதும், பிறகு அதில் நீரேறி யிருக்கக் கூடுமென்பதும், அப்போது அங்கிருந்தவர்கள் நீரை இறைத்து அப்புறப்படுத்த முடியாதென்றும் கப்பலைக் காப்பாற்ற முடியாதென்றும் கருதிப் படகுகளிலேறிக் கப்பலைக் கைவிட்டிருப்பார்களென்பதும் தோன்றின.

இவ்வாறு தான் நடந்திருக்க வேண்டுமென்று தோன்றியதால் தந்தைக்கும் மகனுக்கும் ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் நிம்மதியாய், அதாவது கலக்கமின்றி யிருந்தது. அதென்னவெனில் அதில் மனிதர்கள் இருந்து ஆபத்தில் தத்தளித்துக்கொண்டிருக்கிருர்கள் என்று கருதுவதற்குக் காரணமில்லை. இவர்கள் அச்சேதமடைந்த கப்பலின்

அடித்தட்டைப் பார்த்துக்கொண்டேயிருக்கையில் அது வேகமாய் கரையிலிருக்கும் பாறையைநோக்கி, அலைகளால் தள்ளிக்கொண்டே வரப்பட்டது. மனிதன் எவ்வளவோ தந்திர சாமர்த்தியத்தோடு, அகன்றகடலையும் பயங்கரமான அலைகளையும் ஜெயிக்கவெண்ணிச்செய்த கப்பல் இரண்டு நிமிடங்களில் உருவழிந்து போய்விடும்போல் தோன்றியது.

தந்தையும் மகனும் பயங்கரமான பார்வையோடு அதையே நோக்கிக்கொண் டிருந்தார்கள். அக்கப்பல் அலைகளால் வேகமாய்க் கரையிலிருக்கும் பாறையை நோக்கி, அடித்துக்கொண்டே வரப்பட்டுக் கடைசியில் பாறையின்மேல் கொண்டு வந்து மோதப்பட்டது. மறு விநாடி உருவமாகவிருந்த அந்தக் கப்பலின் அடித்தட்டு அடியோடு உருக்குலைந்து வெறும் பலகைகளாகவும் கழிகளாகவும் அலைகளில் மிதந்தன. அவற்ருேடு சில பெட்டிகள் பீப்பாய்கள் முதலியவைகளும் மிதந்தன.

அச்சமயத்தில் முருகப்பன் கண்களில் ஒருவிதக் கலக்கமும் பிரகாசமும் தோன்றின. ஏனெனில் மேற் கண்டவாறு உடைந்து அழிந்த கப்பலிலிருந்து மிதந்த கழிகள் பலகைகள் முதலியவற்றில் ஒன்றைப்பற்றிக் கொண்டு ஒரு மனிதன் தத்தளிப்பது அவனுக்குப் புலப் பட்டது. முருகப்பன் சீவகாருண்யம் முடையவன். அதோடு தைரியமும், துணிகரமும், உற்சாகமும், பிறர்க் குதவிசெய்யும் தன்மையுமுடையவன். அம்மனிதன் பற்றி மிதக்கும் பலகை குறைந்த ஆழமுடைய இடத்திற் கருகி லிருந்த ஒரு மணற் கரையை நோக்கிச் செல்வதுபோல் தோன்றியது.

முருகப்பன் அக்காட்சியைக் கண்டதும் "ஆ! அதோ! அவன் பிழைத்திருக்கிறுன். அவன் காப்பாற்றப்

படவேண்டும்'' என்றான். மறு நிமிடம் அவன் பாறையின் உச்சியினின்று கடற்கரைக்கு இறங்கத் தொடங்கினான். அப்பாதை சாதாரண பாதையல்ல. மிக்க அபாயகரமானது. பாறையிலுள்ள சிறு பள்ளங்களில் கால் வைத்துப் பாறையில் கொஞ்சம் முன்னுக்கு வந்திருக்கும் பாகத்தைப்பற்றிக்கொண்டே கீழே வந்து சேரவேண்டும். சற்று தவறினால் கீழே வீழ்ந்து மண்டையுடைந்து மடிய வேண்டியதே.

தன் புதல்வன் அத்தகைய அபாயமான வழியிற் செல்வதைக்காணும் எத்தந்தையின் மனந்தான் பொறுமையாய்ப் பார்த்துக்கொண் டிருக்கும். மார்க்கசேனன் தன் புதல்வன் செங்குத்தான அப்பாறையில் இறங்குவதைக் கண்டதே பெருந்திகிலடைந்து மனங்கலங்கி, தன் புதல்வனை நோக்கி, "அடே ஆத்திரக்காரப்பயலே! நீ செய்கிற வேலை பிராணபத்தை யுண்டாக்கும். இடது பக்கமிருக்கும் சற்று அபாயமில்லாத பாதையே செல்'' என்றான். ஆனால் அதற்குள் முருகப்பன் பூரணமாய்க் கீழ்நோக்கி யிறங்கி விட்டான்.

தந்தை மறுபடி ஏதோ மனமாற்ற மடைந்து, "சே! நான் என் அவனைத் தடுக்கவேண்டும்? இப்போது அவன், பூரண உதார குணமும், பிறருக்குத் தன் உயிரைக்கொடுத்தேனும் உதவிசெய்ய வேண்டுமென்ற எண்ணமும், தன் வல்லமையில் பூரண நம்பகமும் கொண்டிருக்கும் இக்காலத்தில் இறந்துபோனால் கௌரவமே யடைவான்'' என்று கூறிக்கொண்டான். ஆனால் மறு விநாடி புத்திரவாஞ்சை அந்த எண்ணத்தை மாற்றிவிட்டது. தன ஆசை, தார ஆசை, புத்திர ஆசை என்ற மூன்றாசைகளே மனிதனை மயக்கி உலகபாசத்தில் அழுத்தி வைப்பன. அவற்றிலும் பொருளாசை மற்ற இரண்டோடு சம்பந்தப்பட்டதே. மனி

தன் பணம், காணி, பூமி, ஆபரணங்கள் முதலியவற்றைச் சம்பாதிப்பது தன் மனைவி மக்களுக்காகவே. ஆகையால் மனிதனுக்குள்ள சகல ஆசைகளும் அந்த மூவாசைகளி லடங்கும்.

மனிதன், தனத்தை யிழந்தால் மறுபடி சம்பாதிப் போம் என்ற தைரியமுண்டு. மனைவியை யிழந்தாலும் வேறொரு மனைவியை வரிக்கலாம் என்ற நம்பிக்கையுண்டு. அவனுக்குப் புத்திர விஷயமோ அப்படியன்று. புத்திர வாஞ்சை மிக்க அழுத்தமானது. அவன், மனைவி தனக் குத் துரோகம் செய்து இன்னொரு அன்னிய புருடனைச் சேர்ந்தாளென்று சந்தேகப்படினும் அவளை யடியோடு வெறுத்து விடுகிறான்; கொன்றும் விடுவான். புத்திரனே தனக்கு எத்தகைய துரோகம் செய்தாலும், அவன் துன் பத்திலிருக்கிறானென்று அறிந்தால் அவன் மனம் சகிக் காது. அவன் வெறுப்போடேனும் அவனுக்கு உதவி செய்தே தீருவான்.

ஆகையால் முதலில் தன் புத்திரன் அபாயமான வழி யில் இறங்கிச்செல்வதை நாமேன் தடுக்க வேண்டுமென்று கருதிய மார்க்கசேனன் மறு விநாடியே "அந்தோ! இத் தகைய வயதில் இவன் மடிவதை நான் சகிக்க முடியுமோ? அந்தோ கடவுளே!" என்று அலறிக்கொண்டே தன் புதல்வனைத் தடுக்கக் கருதிக் குனிந்து பார்த்தான். ஆனால் அதற்குள் முருகப்பன் நெடுந்தூரம் இறங்கி விட்டான். அதைக்கண்டதே மார்க்கசேனன் துரிதமாய் நடந்து இடது பக்கத்திலிருப்பதாகத் தான் முன்கூறிய இறங்கு துறைக்கு அதிவேகமாய்ச் சென்றான்.

ஆனால் அதுமட்டும் க்ஷேமமாகச் செல்லக்கூடிய மார்க்கமல்ல. ஆனால் சற்று சரிவான பாதையை யுடை யது. இவன் அப்பாதை வழியாய் மெதுவாய் இறங்கிப்

பார்த்தபோது தன் புத்திரன் முன்னமே பாறையினடியி லுள்ள கடற்கரைக்கு இறங்கிவிட் டிருப்பதைக்கண்டான். முருகப்பன் மிக்க கஷ்டத்தோடேயே முன்பின் தெரியாத வழியில் இறங்கிச் செல்லவேண்டியதாகவிருந்தது. ஆயினும் அவன் தைரியமும் தேக பலமுமுடையவனுதலால் ஜெய மடைந்தான்.

இப்போது அவன் நிற்குமிடம் கடலோரம் பாறை யின் ஒரு சிறு முனையுள்ளே சென்றிருக்குமிடம். அவன் தந்தையோ இடதுபக்கம் சற்றுதூரம் சென்று அங்கிருந்த வழியில் கீழிறங்கினுன். அதுமட்டும் சாதாரண வழியல்ல. சற்று சுமாரானது. அவ்வழியாகத்தான் ஜலபுரத்திலுள்ள வர்கள் அவசியமானபோது கடலோரம் பாறையின் அடிக்குவருவது.

ஆனுல் மார்க்கசேனன் அவ்வழியாக அடிவாரத்திற்கு வருவதற்குச் சற்று நேரத்திற்கு முன்பே, முருகப்பன் தன் துணிகரமான பிரயாணத்தை முடித்து விட்டான். கப்பல் கடலில் சேதப்பட்டபோது, அது அடியோ டழிந்து போனதால் சில பலகைகள் கழிகள் பீப்பாய்கள் முதலியவைகளே மீதியாய்க் கடலில் மிதந்தன. முருகப் பன் உற்றுப் பார்த்தபோது, தான் முன்பு கண்ட உரு வத்தைக் கண்டான். அதாவது ஒருமனிதன் ஒரு கழி யைப்பற்றிக்கொண்டிருப்பதைக்கண்டான். அவன் சமீபத் தில் வந்தபோது அம்மனிதன் அக்கட்டையைக் கெட்டியா கப்பற்றிக்கொண்டிருக்கிறுனென்பது மட்டும் தெரிந்ததே யன்றி அவன் எவ்வித முயற்சியும் செய்வதாகத் தெரிய வில்லை.

முருகப்பன் கடல் நீரினருகில் வந்து சேர்ந்தபோது அம்மனிதன் பற்றிக்கொண்டிருக்கும் கட்டை அலையால் கரையிலுள்ள மணலில் கொண்டுவந்து எறியப்பட்டது

ஆனால் பாதி கரையிலும் பாதி ஜலத்திலுமிருந்ததால் பின னால் வரும் அலை யதை மறுபடி கடலுக்கு இழுத்துச் சென்று விடும்போல் தோன்றியது. முருகப்பன் அதி துரிதமாய் அந்த விடத்திற்கு ஓடிப்பார்த்தபோது, ஒரு மனிதன் கட்டையைக் கெட்டியாய்ப் பற்றி யிருக்கிறு னென்றும், ஆனால் அவன் தற்செயலற்றுக் கிடக்கிறு னென்றும் அறிந்தான்.

முருகப்பன் அவனருகிற்சென்று உற்று நோக்குவதற் குள் ஒரு பெரிய அலை வேகமாக வந்ததும் அம்மனிதனைக் கட்டையோடு மறுபடி கடலுக்குள் இழுத்துச் செல்லத் தொடங்கியது. முருகப்பன் துரிதமாகச்சென்று அம்மனி தனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். அலையின் வேகம் இருவரையும் இழுத்துச் செல்லும்போ லிருந்தது. ஆனால் முருகப்பன் தன் முழுப்பலத்தையும் காட்டிக் கால்களைக் கெட்டியாக ஊன்றிக்கொண்டு அம்மனிதனைச் சேர்த்தணைத்துப் பிடித்தபிடி விடாமலிருந்தான். அந்த அலை சென்றதும் மறு அலை வருவதற்குள் அம்மனிதனைச் சற்று மேடான மணல் திட்டிற்குக் கொண்டுவந்து சேர்த் தான்.

அம்மனிதனை க்ஷேமமான விடத்திற்குக்கொண்டு போய்ச்சேர்த்ததும் அவனையுற்றுநோக்கி அவன் ஸ்மரணை யற்றிருந்தாலும் உயிரோடிருக்கிறனென் றுணர்ந்தான். உடனே அவனுக்குச் சீக்கிரம் சமயோசிதப்படி சிகிச்சை செய்யவேண்டுமென்ற யோசனை யுதித்தது. அவன் என்ன செய்வான் பாபம்; சுற்றுமுற்றும் நோக்கினன் ஒரு பிராணியுமில்லை. தன் தந்தை நின்றிருந்த பாறையின் சிகரத்தை நோக்கினன். அங்கு ஒருவருமே காணப்பட வில்லை. கடைசியில் குனிந்து கடலால் எறியப்பட்ட அம் மனிதன் அருகில் உட்கார்ந்து அவனை யுற்று நோக்கினன்.

அம்மனிதன் அக்காலத்திய உயர்தர நாகரீகத்திற் கொத்தவாறு சரிகையிழைத்த உயர்ந்த விலையுள்ள உடைகளை யணிந்துகொண்டிருக்கிறான். அவன் கைவிரல்களில் இரத்தினங்களிழைத்த மோதிரங்களணிந்து கொண்டிருக்கிறான். அவனுடைய உருவத்தை நோக்கும்போது அவன் மிக்க உயர்ந்த அந்தஸ்திலிருப்பவன் என்பது தோன்றிற்று. அவன் உயிரோடிருந்தாலும் மிக்க பலகீனமாகச் சுவாசம் விடுவதை நோக்கச் சீக்கிரத்தில் தக்க சிகிச்சை செய்தால் தான் பிழைப்பான் என்பது தோன்றியது.

முருகப்பன் துரிதமாக அம்மனிதனுடைய கழுத்துப் பட்டையை யவிழ்த்துவிட்டு அவனுக்கு உடனே எவ்வளவு உதவி தான் செய்யக்கூடுமோ அவ்வளவு உதவியைச் செய்து, அவன் தேகத்தில் அதிக சூடுண்டாகுமாறும் அவன் தாராளமாய்ச் சுவாசம் விடுமாறும் செய்தான். பிறகு அருகில் பாறையின் மறைவிடங்களில் யாரேனுமிருப்பார்களென்றும் அவர்கள் உதவியால் இவனை நமது வாசஸ்தலத்திற்குக் கொண்டு போகலாமென்றும் கருதிக் கூவிப்பார்த்தான். அவன் எவ்வளவு கூவியும் ஒரு பதிலுமில்லை. அச்சமயம் கடலோரம் சற்று தூரத்தில் யாரோ ஒரு மனிதன் மெதுவாய் எச்சரிக்கையோடு வந்து கொண்டிருப்பதைக் கண்டான். முதலில் வருவது தன் தந்தையாகவிருக்குமென்று கருதினான். ஆனால் மறு விநாடி தன் தந்தை இடதுபக்க வழியாக அங்கு வந்திருக்க முடியாதென்று அவன் புத்திக்குப் புலப்பட்டது. அதற்குள் அம்மனிதனும் சற்று சமீபமாய் வந்தபோது அவன் தன் தந்தையினும் குறைந்த உருவமுடையவன் என்பது தெரிந்தது. பிறகு சற்று உற்று நோக்கியபோது அவன் கடந்த இரவு எல்லப்பன் வீட்டில்

தான் சந்தித்த ஹாக்கர் சுந்தரம் பிள்ளையென்பது தெரிந்தது.

முருகப்பன் ஆவலோடு "ஓ சுந்தரம் பிள்ளை! சுந்தரம் பிள்ளை!! சீக்கிரம்வா" என்று கூவினான். சுந்தரம்பிள்ளை கப்பற்சேதத்தால் கடலோரம் ஒதுக்கப்பட்ட பொருள்களை மறுபடி அலையிழுத்துச் செல்லாதபடி மேட்டில் எடுத்துவைக்கும் வேலையிலிருக்கிறான். அதாவது கொள்ளையடிக்கும் தொழிலிலிருக்கிறான். ஆகையால் அவன் சுலபத்தில் முருகப்பன் சத்தத்தைக் கேட்கவில்லை. பிறகு கேட்டபோது அவன் அருகில் வந்து முருகப்பன் கப்பற்சேதமடைந்த ஒரு மனிதனைக் காப்பாற்ற முயல்வதைக் கண்டான். உடனே அவனுக்கு வெறுப்பும் கோபமும் உண்டாயின. அதனால் அவன் "அடடா! உனக்கென்ன பைத்தியமா? இவ்வளவு காலமாய் இத்தீவில் வசித்த நீ இத்தகைய ஆபத்தை விளைவிக்கும் காரியத்தைச் செய்ய முயல்வது விந்தையாகவே யிருக்கிறது. நீ இவனைக் காப்பாற்றினால் இவனால் எத்தகைய தீங்கு நேரிடுமென்பதை யறியவில்லை. நீ யிவனை யுயிர்ப்பித்தால் இவன் உனக்குப் பெருந்தீங்கிழைப்பான் என்பது நிச்சயம். நமக்கு அனுகூலமான விஷயத்தில் எனக்கு வந்து ஒரு கை கொடுத்துதவு. இன்னும் யாரேனும் வருமுன் இந்த இரண்டு பெட்டிகளையும் மேட்டில் இழுத்துச் செல்வோம் வா. இவற்றிலிருப்பவற்றை யிருவரும் பகிர்ந்து கொள்ளலாம். இதற்காக உண்மைப் பக்தர்கள்போல் கடவுளுக்கு வந்தனமளிப்போம்" என்றான்.

---

## 12-வது அத்தியாயம்.

சத்தத்தீவின் கரையில் பாறைகள் நிறைந்திருக்கின்றன. அங்குள்ள கடலில் அடிக்கடி புயற்காற்றடித்துக் கப்பல்கள் அங்கிருக்கும் பாறைகளில் கொண்டு வந்து மோதப்பட்டுச் சேதமடைவது வழக்கம். அச்சமயங்களில் அலைகளால் கரையில் கொண்டு வந்து எறியப்படும் பொருள்களை ஊரார் கொள்ளையடிப்பது வழக்கம். இவர்களுக்குள் ஒரு மூடக்கொள்கையுண்டு. அதாவது அக்கப்பற் சேதத்திலிருந்து யாரையேனும் காப்பாற்றினல் அவர்களால் அவர்களைக் காப்பாற்றுகிறவர்களுக்குப் பெரிய ஆபத்துண்டாகுமென்று அவர்கள் நம்பிக்கொண் டிருந்தார்கள். அதனல் யாரேனும் கரையில் எறியப்பட்டால் அவர்கள் ஆதரிக்கப்படுவதில்லை. இது கப்பற்சேதத்தால் கிடைக்கும் பொருள்களை யபகரிப்பதற்கு மிக்க அனுகூலமானதே. ஒரு சமயம் கப்பற்சேதத்தால் காப்பாற்றப்பட்ட ஒருவனல் அத்தகைய தீங்கு தற்செயலாக நேர்ந்திருந்தாலும் இருக்கலாம். எவ்வாற்ருனே அம்மூடக்கொள்கையைத் தீவாரால் அனுசரிக்கப்பட்டு வந்தது. இக்காரணங்களால் அவ்வூரார், யாரேனும் கப்பற் சேதமடைந்து பிராணபத்திலிருந்தாலும் அவர்களைக் காப்பாற்றுவதில்லை. அக்கப்பற் சேதத்தால் கரையில் வந்து சேர்ந்த அவர்கள் பொருள்களையெல்லாம் கொள்ளையடித்துக்கொள்ளமாட்டும் பின்னிடைய மாட்டார்கள். ஆனல் மற்ற விஷயங்களிலோ அவ்வூரார் ஜீவகாருண்யத்தோடு நடந்து கொள்கிறவர்களே.

முருகப்பனுக்கும் இச்சங்கதி தெரியாததல்ல. ஹாக்கர் சுந்தரம்பிள்ளை அக்கொள்கையைப் பூரணமாய் நம்பிக்

கொண்டு அவ்வாறே நடப்பவன். அவன் ஊரூராகச்சுமந்து சென்று விற்கும் சாமான்கள் பெரும்பாலும் இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்டவையே. அவன் புயற்காற்றடிக்கும் போதெல்லாம் மறுநாட்காலை கட்டாயம் கடற்கரைக்கு வந்து அகப்பட்டதைக் கொள்ளையடிப்பது வழக்கம். அவன் மட்டும் கப்பற்சேதமடைந்தவர்களைக் காப்பாற்ற முயன்றிருந்தால் அனேகம் ஜீவர்களைக் காப்பாற்றி யிருக்கலாம்.

முருகப்பன் கப்பற்சேதமடைந்த மனிதனைச் சௌக்கியமான விடத்திற்குக் கொண்டுபோவதற்காகத் தனக்குதவிபுரியும்படி ஹாக்கரைப் பன்முறை வேண்டியும் அவன் அதைக் கவனிக்கவேயில்லை. அந்த விடத்தில்தான் கப்பற்சேதமடைந்ததால் அலையால் கரையில் எறியப்படும் பொருள் கிடைப்பதென்று அவன் அறிவானுதலின் அங்கு வந்தான். அதில் அவன் நெடுநாட் பழக்கமுடையவன். ஆகையால் அவன் அங்கு வந்து அகப்படும் பொருள்களில் விலை மதிப்புள்ளவைகளையெல்லாம் கைப்பற்றிச்செல்வது வழக்கம். இச்சமயம் அவன் நாட்டம் முழுமையும் இரண்டு பலமான பெட்டிகளின்மேலிருந்தது. அப்பெட்டிகள் பலம் பொருந்திய பலகைளால் செய்யப்பட்டுப் பித்தளைக்கட்டுகள் போடப்பட்டிருந்தன.

ஹாக்கர் அப்பெட்டிகளின் பூட்டையுடைக்க எவ்வளவோ முயன்றும் அது முடியவில்லை. கடைசியில் அவன் தன் மடியிலிருந்து ஒரு சிற்றுளியையும் சுத்தியையும் எடுத்து அப்பெட்டிகளின் கீல்களைப் பெயர்க்கமுயன்றான். முருகப்பன் அவனுடைய ஜீவகாருண்யமற்ற செய்கையை யிதுகாறும் பொறுத்துப்பார்த்தான். அதற்கு மேலும் பொறுக்கமுடியவில்லை. ஆகவே தான் பிடித்துத் தாங்கிக் கொண்டிருந்த மனிதனைக் கழியின்மேல் சாய்த்துப் படுக்க

வைத்துவிட்டு ஹாக்கர் சுந்தரம் பிள்ளையை நோக்கி "அட சவிரக்கமற்ற சண்டாளனே! உடனே வந்து ஆபத்திலிருக்கும் இம்மனிதனுக்குச் சிகிச்சைசெய்து இவனை க்ஷேமமான விடத்திற்குக் கொண்டுபோக எனக்கு உதவி செய். இன்றேல் நான் உன்னை என் கரங்களால் நறுக்கி உன் எலும்புகள் எல்லாம் முறியும்படி செய்வதோடு இத்தீவின் சொந்தக்காரரிடம் நீ பொருள்களைக் களவாடும் சங்கதியைக்கூறி நீ தக்க தண்டனை யடையும்படி செய்வேன். அதோடு நீ இத்தீவிலிருந்து அடியோடு துரத்தி விடப்படுவாய் என்பது நிச்சயம். என் வார்த்தைகளை யலட்சியமாகக் கருதாதே பத்திரம்! பத்திரம்!" என்றான்.

முருகப்பன் கூறும் வார்த்தைகள் நாராசம்போல் ஹாக்கரின் செவிகளில் வீழும் சமயம் அவன் திறக்கக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த பெட்டிகளில் ஒன்றின் மேல் மூடி திறந்து கொண்டது. அவன் அதற்குள்ளிருந்தவைகளை நோக்கினான். அவை கண்களைக் கவரத்தக்க உடைகளாகவிருந்தன. கடற்பிரயாணம் செய்வோர் அணியும் உடைகளும் அப்பெட்டியிலிருந்தன. மேலேயடுக்கப்பட்டிருந்தவற்றை யெடுத்தபோது கீழே வெள்ளிச் சரிகையிழைத்த உயர்தர உடைகளும், பட்டுடைகளும், வெள்ளியாற் செய்யப்பட்ட திசையறி கருவியும்,வெள்ளிக் கைப்பிடி வைத்த உடைவாளும், இன்னும் இவைபோன்ற விலையுள்ள பொருள்களுமிருந்தன. இவையாவும் வியாபாரத்தில் நல்ல பொருளளிக்குமென்பது ஹாக்கருக்குத் தெரியும்.

அவனிடம் அந்த உடைவாளிருந்தது. அது குத்தவும் வெட்டவும் உதவும். அவன் தனக்கு அகப்பட்ட கொள்ளைப்பொருள்களை யிழந்து விடுவதைவிட அக்கத்தியை யுருவிக்கொண்டு முருகப்பனோடு ஒரு கைபார்க்கப் பாதி மனமுடையவனாகவே யிருந்தான். அவன் சற்று குட்பை

யுருவுடையனெனினும் பலம் பொருந்திய நடு வயதுடைய ஆளே. அவன் முருகப்பன் கூறியதற்கு "நீ யவ்வாறு உறுதியாய்க் கூறவேண்டாம்! கூறவேண்டாம்!! என்னி டம் நீ அவ்வாறு கூறுவதை நான் பொறுக்க முடியாது; நான் நமது தேச நீதிப்படி நடக்கிறேன். நம் கடற்கரை யில் எறியப்படும் பொருள்கள் நமக்குச் சொந்தமான வையே. நீ என் வேலையைத் தடுத்தாலும் என்மேல் கை வைத்தாலும் பிறகு மிக்க மனவருத்தப்படும்படி நான் செய்வேன்" என்றான்.

அவன் மொழிகளைக் கேட்டதே முருகப்பன் உடனே அவனிடம் ஒரு கை பார்க்கவே நினைத்தான். ஆனால் அச் சமயம் பின்பக்கமிருந்து "பொறு!" என்று ஆங்கார முடைய ஒரு தொனி கிளம்பியது. அக்குரல் பிச்சிமலை நாகம்மாளுடைய குரலே. இவர்களிருவரும் சம்பாஷித் துக்கொண் டிருக்கையில் அவள் இவர்களை யறியாமலே அருகில் வந்துவிட்டாள். அவள் மறுபடி "பொறு" என்று கூறி ஹாக்கரை நோக்கி "ஏ சுந்தரம்பிள்ளை! நீ முருகப்பன் கோருகிற உதவியைச் செய்யவேண்டியதே. அப்படிச்செய்தால் இன்று நீ யடையக்கூடிய எல்லா இலா பத்தைக்காட்டினும் அதிகமான பலனை யடைவாய்; இதைக் கூறுவது நான் என்று அறிந்து கொள்" என்றாள்.

அவள் மொழிகளைக்கேட்ட ஹாக்கர் தான் கையாற் றெட்டுப்பார்க்கும் உடைகளில் நாட்டமுடையவனாய் "இது ஆயிரத்து எழுநூறுவது புள்ளியுடைய துணி. மிக்க உறுதியும் நாணயமுமுடையது. ஆயினும் மூதாட் டியே உன் கட்டளை நிறைவேற்றப்படும்" என்று கூறி விட்டுச் சற்று முன்பு முருகப்பனுடைய கோரிக்கைக்கு எதிர்த்துப் பேசியதற்கு மாறாக "நான் முருகப்பன் கட் டளைப்படி நடந்துகொண்டுதானிருப்பேன். ஆனால் அவன்

பிரமாணிக்கம் செய்தது என் இரத்தத்தில் கொதிப்பை யுண்டாக்கியது. அதனால் என்னை மறந்து எனக்குக் கொஞ்சம் கோபம் உண்டாகி விட்டது'' என்று கூறினான்.

அதன் பிறகு சுந்தரம்பிள்ளை தன்னிடமிருந்த ஒரு பிராந்திப்புட்டியை யெடுத்துக்கொண்டு கப்பற் சேதமடைந்த மனிதனிடம் சென்று "இது நல்ல முதற்றரமானது. இது இவனுக்குச் சுகமுண்டாக்காவிடின் வேறெதுவும் சுகப்படுத்துமென்று எனக்குத் தெரியவில்லை'' என்று கூறிவிட்டு அப்புட்டியிலிருந்த பிராந்தியை ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் ஊற்றி அளவு காட்டுபவன்போல் தான் பருகிவிட்டு, இன்னும் கொஞ்சம் ஊற்றி அம்மனிதனுக் களிக்க நீட்டியவன் தட்டென்று நின்று நாகம்மாளை நோக்கி "அம்மையே! நான் இவனுக்கு உதவி செய்து இவனைச் சுகப்படுத்திவிட்டால் இவனால் எனக்கொரு தீங்கும் நேரிடாதென்று நீ கூறுகிறாயா? இத்தீவில் இவ்விஷயத்தைப்பற்றி நெடுங்காலமாய் யாவரும் கூறிக்கொண்டிருப்பது இன்னதென்று உனக்கு தெரிந்தேயிருக்கும்; நான் அதிகம் கூறவேண்டுவதில்லை'' என்றான்.

அவன் கூறியவற்றிற்கெல்லாம் விடையாக நாகம்மாள் அவன் கரத்திலிருந்த புட்டியை வாங்கிக் கொண்டு கப்பற் சேதமடைந்தவனுடைய கன்னங்களையும் கழுத்தையும் சூடெழும்பத் தேய்த்துக்கொண்டே அவன் விழுங்கியிருக்கும் கடல் நீரைக் கக்குமாறு அவனை யொருவிதமாய்ச் சாய்த்துப் பிடித்துக்கொள்ளும்படி முருகப்பனுக்குக் கற்பித்தாள்.

சுந்தரம்பிள்ளை சற்றுநேரம் பேசாமல் அவள் செய்கைகளைப்பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு "உண்மையில் இப்போதிவனைக் காப்பாற்றுவதில் அவ்வளவாக ஆபத்து நேராதென்றே நான் எண்ணுகிறேன். ஏனெனில்,

இவன் முன்னமே கடலிலிருந்து வெளியில் எறியப்பட்டிருக்கிறான். இப்போது கரையில் உயர்ந்த தரையிலிருக்கிறான். இவனுக்கு யார் முதல் உதவிசெய்கிறார்களோ அவர்களுக்கே ஆபத்துண்டாகுமாம். ஆ! பாபம் இம்மோதிரங்கள் இவன் விரல்களிலிருந்துகொண்டு இம்சை செய்துகொண்டிருப்பது காண்பதற்குப் பரிதாபமே. விரல்கள் வீங்கியிருப்பதால் மிக்க வேதனை பாபம்'' என்று கூறிக்கொண்டே அப்போது தான் உயிர் வருகிறதென்பதற்கு அறிகுறியாக அசையத்தொடங்கும் அவன் விரலிலிருக்கும் மோதிரத்தைக் கழற்ற முயன்றான். அம்மோதிரங்கள் விலையுள்ளவை.

அவன் செய்கையைக் கண்ட நாகம்மாள் உள்ளத்தில் மிக்க வெறுப்படைந்து அவனை நோக்கி, "ஓ மனிதனே! உன் உயிரின்மேல் உனக்கு விருப்பமிருந்தால் இவனைத் தொடாதே. இன்றேல் நீ மறுபடி இத்தீவில் நடமாடாத மாதிரி நான் செய்து விடுவேன்'' என்றாள்.

நாகம்மாள் விஷயத்தில் யாருக்கும் பீதியே. ஆகையால் அவன் அவளை நோக்கி, "அம்மையே! நான் உன் விருப்பப்படி நடந்து கொள்கிறேன். முன்னமே என் முழங்கால்களில் வாயு நோயிருக்கிறது. அதுவே என்னை யித்தீவில் என் பிரியப்படி உலவமுடியாமற் செய்துவிடும் போலிருக்கிறது. நான் ஏழை. ஏதோ கௌரவமாய்க் கொஞ்சம் இலாபம் கிடைத்தால் போதுமென்று காலங் கழிப்பவன். அதோடு கடவுள் கடற்கரையில் எதையேனும் எறிந்தால் அந்த உதவியை யேற்றுக்கொண்டு திருப்தியடைந்திருப்பவன்'' என்றான்.

நாகம்மாள்:—"அவ்வளவு தெரிந்திருப்பதால் நீ பேசாமலிரு. அதனால் தீமையுன்னை யணுகாது. இம்மனிதன் பிராணன் மதிப்புடையது. இவனை யுன் தோள் மேல்

தூக்கிக்கொள். இதற்காக நீ நல்ல பரிசுபெறுவாய்" என்றாள்.

சுந்தரம்பிள்ளை மிக்க முகவாட்டத்தோடு திறந்திருக்கும் பெட்டியையும் அதிலுள்ள விலை பெறும் வஸ்துக்களையும் பார்த்துக்கொண்டே, "இப்பொருள்கள் எனக்குக் கிடைத்திருக்கும். இம்மனிதன் எனக்கும் இவற்றிற்கும் இடையில் வந்தான். இப்போது இவை மறுபடி வரும் அலைகளால் கடலுக்குள் இழுத்துக்கொண்டு போகப்படும்" என்றான்.

**நாகம்:**—"இதற்காக நீ பயப்படவேண்டாம். இவை யெப்படியும் மனிதனுக்கு உபயோகப்படும். இதோ பார் உன்போல் இரையிருக்கும் வாசனையை யறிந்து கொண்ட கழுகுக் கூட்டங்கள் அதிவேகமாய் வந்து கொண்டிருக்கின்றன" என்றாள்.

உண்மையில் அச்சமயம் ஜலபுரத்திலுள்ள ஜனங்கள் இரவு அடித்த புயற்காற்றால் ஏதேனும் கப்பல் அழிந்து போய் அதிலிருந்த பொருள் கரையில் ஒதுக்கப்பட்டிருக்கும் என்றுணர்ந்து அவற்றைச் சூறையாடவேண்டுமென்று துரிதமாக வந்துகொண் டிருக்கிறார்கள்.

ஹாக்கர் அவர்களைக்கண்டதே மிக்க மனவேதனையடைந்தான். "ஒகோ! ஜலபுரத்தார்கள். இவர்கள் யாவற்றையும் துடைத்து விடுவார்கள், இவர்களைப்பற்றி யாவருமறிவார்கள். இவர்கள் கடவுள் தங்களுக்கு இவற்றை யளிப்பதற்காக அவருக்கு ஒரு வந்தனமேனுமளிக்கமாட்டார்கள். திருட்டாந்தமாய்க் கிராமாதிகாரியாகிய இரங்கநாதன் இருக்கிறான்; அவன் குருவிடம் நல்லுபதேசம்பெற ஒருமைல் நடக்கமாட்டான். ஒரு இடத்தில் கப்பல் சேதம் நேர்ந்ததெனில் பத்துமைல் வேண்டுமாயினும் துரிதமாய் நடந்து செல்வான்" என்றான்.

நாகம்மாள், "பேசியதுபோதும்" என்றாள். அவள் அதிகாரம் அவன்மேல் எக்காரணத்திற்காகவோ செல்லும் வல்லமையுடையதாக விருந்தது. ஆகையால் ஹாக்கர் பேசாமல் கப்பற்சேதமடைந்த மனிதனைத் தனது பலம் பொருந்திய தோளின்மேல் தூக்கிக்கொண்டு கடற்கரை வழியாய் நடக்கத்தொடங்கினான். இதற்கிடையில் ஆபத்தில் சிக்கிய மனிதன் ஏறக்குறையப் புத்தி சுயாதீன மடையும் நிலைமைக்கு வந்து விட்டான். அவன் தூக்கிக்கொண்டு போகப்படும்போது அங்கிருந்த பெட்டிகளைச் சுட்டிச் காட்டி என்னவோ கூற முயன்றான். அப்போது நாகம்மாள் "நீ யொன்றும் கூறவேண்டாம்; எனக்குத்தெரியும்; அவை பாதுகாக்கப்படும்" என்று மொழிந்தாள்.

இவர்கள் அங்கிருந்த சரியான பாதையில் ஏறிச்செல்லும்போது ஜலபுரத்திலிருந்து வரும் ஜனங்கள், ஆணும் பெண்ணும், யாவரும் நாகம்மாளுக்கு மரியாதையோடு வழிவிட்டு விலகினார்கள். யாவருக்கும் அவளிடம் பீதியிருந்தது. அக்கூட்டத்தில் கிராமத் தலைவனாகிய இரங்கநாதன் என்பவனும் இருந்தான். நாகம்மாள் இரண்டடி அவர்களைக் கடந்து சென்றதும் திரும்பி இரங்கநாதனை நோக்கி,

"ஓ! இரங்கநாதா! நான் கூறுவதைக் கவனமாகக் கேட்டுக்கொள். அதோ அங்கே மேல்மூடி திறக்கப்பட்ட ஒரு பெட்டியும் இன்னொரு பெட்டியுமிருக்கின்றன. அவையப்படியே உன் வீட்டில் கொண்டுவந்து பத்திரமாக வைக்கப்பட்டு என்னிடம் அளிக்கப்படவேண்டும். என் கட்டளையை யலட்சியம் செய்வோர் முன்னுடியே சவக்குழியில் படுத்து விடுவது நலம். தெரிகிறதா நான் கூறுவது?" என்றாள்.

கிராமத் தலைவனாகிய இரங்கநாதன் "அம்மையே!

உனது கட்டளைப்படியே காரியம் நடக்கும். உன் பிரியம் அவ்வாறு இருக்கிறவரையில் அவற்றில் என்ன விருக்கின் றனவென்றுகூட ஒருவரும் பார்க்கமாட்டார்கள்'' என் ருன்.

நாகம்:—“நீ கூறியது புத்திசாலித்தனமான விடையே. அது உங்களுக்குத் தீங்கு நேராதென்று தெரிவிக் கிறது'' என்ருள்.

ஜலபுரத்திலிருந்து வரும் ஜனக்கூட்டத்தின் கடைசி யில் ஒருகிழவி வந்தாள். முதிர்ந்த வயதால் நடக்க முடியாம லிருக்கும் தன் நிலைமையைப்பற்றி அவள் மனவருத்தப் பட்டுக்கொண்டே வந்தாள். ஆனல் அவள் தன்னல் கூடிய வரை மூச்சுப்பிடித்துத் துரிதமாகவே நடந்து வந்து கொண்டிருந்தாள். கொள்ளைப்பொருளில் தன் பங்கு எங்கு மிஞ்சிவிடுமோவென்று அதிக ஆத்திரத்தோடு வந் தாள். இவர்களருகில் அவள் வந்தபோது முருகப்பன் அவள் தங்கள் வீட்டுக்காரியஸ்தியாகிய சுந்தரம்மாள் என் றறிந்தான். அவ்வாறு அறிந்ததும் மிக்க வியப்போடு “என் நீயிவ்வளவு தூரம் வீட்டைவிட்டு வந்தாய்?'' என்று அவளை வினவினன்.

சுந்தரம்மாள்,—“இவர்களெல்லாம் வரவே நீயும் உன் தந் தையும் இங்கிருக்கிறீர்களாவென்று பார்க்கக் கருதி நானும்கூட வந்தேன்'' என்ருள்.

குற்றம் செய்யும்போது கண்டு பிடிக்கப்பட்டவள் போல் அவள் முகத்தில் கலக்கமுண்டாயிற்று. முருகப்ப னும் இரண்டொரு முறைகளில் இத்தகைய சந்தர்ப்பங் களில் அவளைக்கண்டு கண்டித்திருக்கிருன். இச்சமயம் அவன் மனம் வேறு நாட்டத்திலிருந்ததால் அவள் நடக் கையைப்பற்றிக் கவனிக்காமல் “என் தந்தையைப் பார்த் தாயா?'' என்ருன்.

சுந்தரம்மாள்:—ஆகா பார்த்தேன். அவர் இந்த இறக்க வழியாய் வரமுயன்றார். அதனால் அவருக்கு ஆபத்தே நேர்ந்திருக்கும். நான் அவருக்கு எச்சரிக்கைசெய்து அவரை வீட்டிற்குச் செல்லும்படியனுப்பினேன். உன்னையும் கண்டு பிடித்து வீட்டிற்கனுப்பவே வந்தேன். ஏனெனில் உன் தந்தை அசௌக்கியமாக இருப்பவர்போல் காணப்படுகிறார்'' என்றாள்.

முருகப்பன் தன் தந்தையிடம் மிக்க பக்தி விசுவாசம் உடையவன். ஆகையால் அவள் கூறியதைக்கேட்டதே மிக்க மனக்கலக்கமடைந்து "அந்தோ என் தந்தைக்குச் சுகவீனமா?'' என்றான். அன்று காலை தன்னோடு கூடவந்த தன் தந்தை களைப்படைவதாய்த் தோன்றியது அவன் நினைவிலிருந்தது.

சுந்தரம்மாள்:—"ஆம், ஆம், சுகவீனமே. அவர் கன்னங்கள் வெளுத்திருந்தன. அவர் இந்த வேளையில் கடற்கரைக்கு வருவதென்றால்....'' என்று விசனத்தோடு தலையசைத்து "முருகப்பா! நீ சீக்கிரம் வீடுபோய்ச் சேர். நான் கப்பற்சேதமடைந்த மனிதனைக் கவனிக்கிறேன். பிறகு நீ நமது கிராமத்தலைவராகிய இரங்கநாதர் வீட்டில் வந்து அவனைப் பார்க்கலாம். நீ இது காறும் செய்ததற்குமேல் அவனுக்கு என்ன செய்யப் போகிறாய்? ஒன்றுமில்லை'' என்றாள்.

முருகப்பன் அவள் மொழிந்தது உண்மையேயென்று நம்பிக்கொண்டு "நீ சீக்கிரம் வீட்டிற்குவா''என்று கூறிவிட்டு வீட்டை நோக்கி நடந்தான்.

சுந்தரம்மாள் அவன் பாறையின் சந்தில் மறையுமட்டும் அவன் கூடவே சென்று, அவன் மறைந்து விட்டதும் அங்கிருந்து திரும்பி "போபோ சீக்கிரம் விடுபோய்ச்சேர். இங்கு கிடைக்கும் விலையுள்ள பொருள்களில் ஒரு பாகத்

தைப்பெற உனக்கு நற்காலமில்லை. "ஆ! இத்தகைய நல்லதிஷ்டம் இங்கு நேர்ந்தது எப்போதோ ஒரு தடவையே" என்று கூறிக்கொண்டே துரிதமாக நடக்கத் தொடங்கினாள். அவள் தேகபலம் குன்றியிருந்தாலும் மனோதிடம் இருப்பதால் கொள்ளை பொருளில் நாம் பாகம் பெறவேண்டுமென்ற துணிகரத்தோடு வேகமாய் நடக்கத் தொடங்கினாள்.

அவள் சீக்கிரம் கடலோரத்தை யடைந்தாள். அங்கு கிராமாதிகாரியாகிய இரங்கநாதன் என்பவன் கடற்கரையில் சிதறிக் கிடக்கும் பொருள்களில் விலையுள்ளவையெல்லாம் எடுத்துத் தன் ஜேபியில் அடைத்துக்கொண்டு, தான் கழித்து விட்டதை யெடுத்துக்கொள்ளும்படி மற்ற ஏழைகளுக்குக் கூறிவிட்டு "நீங்கள், கடவுள் உங்களுக்கு இத்தகைய நன்மை யளித்ததற்காக அவருக்குப் பிரார்த்தனை செய்யுங்கள். அப்போதுதான் சீக்கிரம் மறுபடி நமது கடற்கரையில் இத்தகைய நற்காலம் நமக்குச் சம்பவிக்கும்படி பகவான் அருள் புரிவார். இத்தரும சொத்துக்களைச் சிறியோர் பெரியோர் யாவரும் பாரபட்சமின்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்" என்றான்.

தான் மட்டும் முன்னடியே முதற்றரமான சொத்துக்களை யெடுத்துக்கொண்டான். அத்தீவாருக்குள் அத்தகைய கொள்ளைத்தொழில் ஒரு சாதாரண தொழிலாகவே கருதப்பட்டு வந்தது. மேல்நாட்டாருடைய நாகரீகமோ கேவலம் மிருகத்தன்மையிலிருந்து வடிகட்டி யெடுக்கப்பட்ட நாகரீகமே. அவர்களுடைய ஜீவகாருண்யம் எத்தகையதெனில் "நீ ஆடு மாடு முதலிய பிராணியைக் கொன்று தின்னக் கருதினல் அவற்றைக்கொல்லும் இடத்திற்குப் பிடித்துச் செல்லும்போது அவற்றிற்கு அனுவசியமான தொந்தரை கொடுக்காமல் அங்கு கொண்டுபோய்க்

கொன்று விடு" என்பதே. அவர்களுடைய மற்ற ஆசாரங்களும் இவ்வாறு வெளிப்பகட்டுமட்டு முடையனவேயன்றி வேறில்லை. அத்தகைய வெளிப்பகட்டுக்கு மயங்கி அவற்றைப் பின்பற்ற முயலும் நம்மவர் புத்திக்கே நாம் பெரிதும் விசனப்பட வேண்டியதாகவிருக்கிறது!

---

## 13-வது அத்தியாயம்.

முருகப்பன் சாதாரணமாகவே துரிதமாக நடப்பவன். அதோடு அன்று காலை தன் தந்தை கொஞ்சம் அசௌக்கியக் குறிகாட்டியதைப் பார்த்ததாலும் சுந்தரம்மாள் கூறியதைக் கேட்டதாலும் அவன் சற்று கலக்கமடைந்து துரிதமாகவே நடந்ததால் சீக்கிரம் வீடு போய்ச் சேர்ந்தான். அங்கு சென்று விசாரித்தபோது தன் தந்தை, தன் சிறிய அறையில், நடந்து வந்த ஆயாசந் தீரப் பெரிய நாற்காலியின்மேல் சயனித்துக்கொண் டிருக்கிறார் என்பது அவனுக்குத் தெரிந்தது. அவரிடம் நேரில் சென்று ஒரு கேள்வி கேட்டதாலேயே சுந்தரம்மாள் ஏதோ தன் காரியார்த்தமாகத் தங்கள் இருவரையும் தந்திரமாக வீட்டிற் கனுப்பிவிட்டாள் என்பதைத் தெரிந்து கொண்டான்.

தந்தை மகனை நோக்கி:—"நீ பிராணனையும் கொடுக்கத் துணிந்து காப்பாற்ற எண்ணிச்சென்ற அம்மனிதன் எங்கே?" என்றான்.

முரு:—நமது வீட்டுக் காரியஸ்தியாகிய சுந்தரம்மாள் அவன் விஷயத்தைக் கவனித்துக் கொள்வதாய்க் கூறியதால் நான் அவனை யவள் வசத்தில் விட்டு வந்தேன்; அத்தகைய விஷயங்களில் அவள் நல்ல அனுபவமுடையவள்.

தந்தை:—ஆம். ஆம். நல்ல வைத்தியமும் தெரிந்தவள்; மந்திரமும் தெரிந்த மந்திரவாதி; நானும் அவள் பேச்சைக் கேட்டே காயமடைந்தவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை யாயத்தம் செய்து வைக்க வீட்டிற்கு வந்தேன். அவள் கூறியதைப் பார்த்தால், அந்த ஆசாமி கைகளும் கால்களும் ஒடிந்து கிடப்பதுபோல் விஷயம் தோன்றியது.

இவற்றைக்கேட்டு முருகப்பன் மௌனமாக விருந்தான். தன் தந்தைக்கு அதே விஷயத்தைப்பற்றிப் பின்னும்பேசப் பிரியமிராதென்று அவன் அறிவான். அதோடு வேறு அபிப்பிராயத்தோடு பேசினால் அவருக்குக் கோபம் வருமென்ற அச்சமும் அவனுக்குண்டு. மாலை நெடுநேரங் கழித்துச் சுந்தரம்மாள் வீட்டிற்கு வந்தாள். அவள் கக்கத்தில் ஒரு சிறு மூட்டை யெடுத்து வந்தாள். அது கொள்ளைப்பொருளில் அவளுக்குக் கிடைத்தபாகமாகும். அவன் தன்னையும் தன் தந்தையையும் தந்திரமாய் ஏமாற்றியதைப் பற்றி அவளைக் கண்டிக்க முயன்றான். ஆனால் அக்கிழவியிடம் தந்திரமான பதில் இல்லாமலில்லை. அவள் முருகப்பனை நோக்கி, "என்ன! நீ பைத்தியக்காரன்போல் அந்த அபாயமான வழியில் இறங்குவதை நான் கண்டேன். நீ பெரும்பாலும் கைகால்களை ஒடித்துக் கொள்வாயென்று கருதியே அதற்குத் தக்க சிகிச்சை செய்ய ஆயத்தமாயிருக்கும்படி உன் தந்தையை நான் முன்னாடி வீட்டிற்கனுப்பினேன். அவர் முகம் வெளுத்து ஆயாசமடைந்திருந்ததை நோக்கி அவர் அசுகமடைவாரென்று கருதியே யுன்னைச் சீக்கிரம் வீட்டிற்கேகும்படி கூறினேன். உங்கள் இருவரின் க்ஷேமத்தில் எனக்கிருந்த அக்கரையும் கலவரமுமே அவ்வாறு என்னைச் செய்யச் செய்தன. இது குற்றமென்று எவன் கூறுவான்?" என்றாள்.

அவ்வாறு தந்திரமாய்க்கூறிய விடை முழுமையும் கேட்டபின் முருகப்பன், "நல்லது; நீ வீட்டு வேலைகளைச் சிரத்தையோடு செய்துகொண் டிருந்தவள், இச்சமயத்தில் என்னைப்பற்றியும் என் தந்தையைப்பற்றியும் கவனிப் பதற்காக அவ்வளவு தூரம் கடலோரத்திற்கு, அதிலும் அந்த விடத்திற்கு வர என்ன சம்பவம் நேர்ந்தது? அதோ உன் கச்கத்திலிருக்கும் சிப்பம் என்ன? நீ நீதிக்கு விரோத மாய்க் கொள்ளையடிக்கச் சென்றாயென்பது நன்றாய்த்தெரி கிறது" என்றான்.

சுந்தரம்மாள் நல்லதனமாகவும் கேலியாகவும் பேசு வதுபோல் அபிநயித்து, "என்ன குழந்தாய்! இவ்வளவுதானா உனக்குத் தெரிந்தது? என்போன்ற ஏழை கடற்கரைக் குச் சென்று ஏதோ சும்மா கிடைக்கும் பொருள் பெறு வதைத் தடுப்பதா நீதியென்று கருதுகிறாய்? ஓ குழந்தாய்! கடற்கரையில் ஒரு கப்பல் சேதமடைந்ததென்று கேள்விப் பட்டால், கோயிலில் பலிபீடத்தில் நின்று ஞான போதனை செய்யும் என் குருவே உடனே தமது தொழிலை விட்டுக் கடற்கரைக்குப் புறப்பட்டு விடுவாரென்னின், என்போன்ற ஏழைப்பரதேசி செல்வது ஒரு அதிசயமோ? நான் போய் என்ன லாபம் பெற்றுவிட்டேன். இரண்டு மூன்று துணி களும், குறைந்த விலை மதிப்புள்ள இரண்டு மூன்று உடை களும், இன்னும் இரண்டு மூன்று அற்பப் பொருள்களுமே. விலையுயர்ந்தவற்றையும் நல்ல பொருள்களையும் சுறுசுறுப் பும் தேகபலமுமுள்ளவர்கள் கைப்பற்றிக்கொள்கிறார்கள். இன்று என் கஷ்டத்திற்குத் தக்கது ஒன்றும் எனக்குக் கிடைக்கவில்லை" என்றாள்.

முரு:—ஆனவரையில் உனக்குக் கொஞ்சமாகக் கிடைத்தது. உண்மையாயின் அவ்வளவும் உனக்கு நலமே. ஏனெ னில் கப்பற் சேதமடைந்து பரிதாபமாய் மரிக்கும்

மனிதரின் பொருள்களைக் கொள்ளையடித்ததில் நீ எவ்வளவு பாகம் பெற்றனையோ அவ்வளவு தண்டனையே யுனக்குத் தப்பாமற் கிடைக்கும்.

சுந்தரம்மாள்:—"என்ன குழந்தாய்! நியாயமான காரியத்தைச் செய்ததற்காக என்போன்ற கிழவிகளைக்கூட யாரேனும் தண்டித்தார்களோ? நம் தீவின் பிரபுவை அனேகர் தூஷிக்கிறார்கள். ஆனால் அவர் தம் காரியஸ்தனைக் கடற்கரையில் வைத்துச் சேதமடையும் கப்பலுக்கு யாரேனும் உதவி செய்தால் அவர்களைக் கண்டிக்க ஏற்பாடு செய்திருக்கிறார். பாபம் சேதமடைந்த கப்பலிலுள்ளோர் இந்தக் கர்ம பூமியை விட்டு மேலுலகம் போய்ச் சேர்ந்து விட்டார்கள். அவர்களுக்கு இவ்வுலக அற்பப் பொருள்களில் சற்றும் வாஞ்சையாவது நினைப்பாவதில்லை. தங்களின் க்ஷேமத்திற்காக ஏழைகள் அவ்வற்பப்பொருள்களை யெடுத்துக்கொள்வது பெரும் புண்ணியம்" என்றாள்.

தன் அக்கிரமச் செயல்களை மறைக்க அவள் கூறும் மொழிகளை யின்னும் கேட்க முருகப்பனுக்கு மனம் பிடிக்கவில்லை. அவன் "நீ சீக்கிரம் போசனத்தை யாயத்தம்செய்" என்று கூறிவிட்டுத் தன் தந்தையிடம் சென்றான். மார்க்கசேனன் முன் இருந்த இடத்தில் அதே நிலைமையில் உட்கார்ந்துகொண் டிருக்கிறான். சற்று நேரத்தில் ஆகாரம் வட்டிக்கப்பட்டதும் தந்தையும் தனயனும் போஜனம் செய்தார்கள். சாப்பிட்டு முடிந்ததும், முருகப்பன் தான் கிராமத்திற்குச் சென்று கப்பற்சேத மடைந்த அம்மனிதனைக் கண்டுவர விரும்புவதாகத் தந்தையிடம் கூறினான்.

தந்தை யப்படியே செய்யென்று சிரக்கம்பம் செய்தான். முருகப்பன் "அப்பா! அந்தவிடத்தில் பாபம்

அம்மனிதனுக்குச் சௌகரியத் தாழ்வாகவே யிருக்கும். பார்வைக்கு அவன் மிக்க அந்தஸ்தைச் சேர்ந்தவனாகவே தோன்றுகிறான். இப்போதவன் இருக்கும் பலஹீனமான ஸ்திதியில் இந்த ஜனங்கள் தங்களால் கூடியவரையில் அவனுக்கு என்ன சௌகரியம் செய்தபோதிலும்........" என்பதற்குள்,

தந்தை சிரக்கம்பம்செய்து "நீ இன்னது கூறப் போகிறாயென்பது எனக்குத் தெரியும். நாம் நம்மாலான உதிவியை யவனுக்குச் செய்யவேண்டு மென்கிறாய். நீ சென்று அவனைப்பார். அவனுக்குப்பணம் வேண்டுமாயின் எவ்வளவு தொகை வேண்டுமோ அதை நாம் கொடுப்போம். ஆனால் அவனுக்கு இடமளிப்பதாவது, அவனோடு சம்பாஷிப்பதாவது, என்னால் ஆகா. அப்படி நான் செய்யவுமாட்டேன். நான் புது மனிதரோடு புழங்காமலிருக்கவும் புது முகங்களைப் பார்க்காமலிருக்கவுமே இந்த வடகோடி மூலைக்கு வந்து சேர்ந்தேன். அவர்கள் துக்கங்களைப்பற்றியும், கஷ்டங்களைப்பற்றியும் உள்ள சமாசாரம் எனக்குத் தெரியவேண்டாம். உனக்கு இன்னும் இருபது வருடங்கள் உலக அனுபவம் சேரின், நீ உன் பழைய நண்பர்களோடு செய்த சகவாசத்தால் இனிப் புது சிநேகம் நம் ஆயுள் வரையில் வேண்டாம் என்ற தீர்மானம் உனக்குள் உண்டாகிவிடும். போ! ஏன் நிற்கிறாய்? அம்மனிதனை இதை விட்டுச் சீக்கிரம் அனுப்பிவிடு. இப்போது நமக்கு அறிமுகமாயிருக்கும் வஞ்சகக் கள்ளர்களின் சகவாசமே எனக்குப்போதும். இவர்களின் அக்கிரமங்களுக்கு உடன்பட்டுப் பழகி விட்டோம். வேறு புதிதான ஒருவரையும் பார்க்க எனக்கு விருப்பமில்லை" என்று கூறி விட்டுத் தன் பணப்பையைப் புத்திரன் முன் வைத்து "இதை யெடுத்துக்கொண்டு துரிதமாகச்செல்" என்றான்.

முருகப்பன் அதி துரிதமாகக் கிராமாதிகாரியாகிய இரங்கநாதப் பிள்ளையின் வீட்டிற்குச் சென்றான்; அங்கு ஒரு அறையில் நெகிடித்தீயினருகில் கடற்கரையில் திறந்து வைக்கப்பட்டிருந்த அதே பெட்டியின்மேல் கப்பற்சேதமடைந்த மனிதன் உட்கார்ந்து கொண்டிருப்பதைக் கண்டான். இரங்காதன் வீட்டிலில்லை. அவன் அகப்பட்ட மற்ற சொத்துக்களை யாவர்க்கும் முறைப்படிப் பங்கிட்டுக் கொடுக்கும் வேலைக்குச் சென்றிருக்கிறான். அந்த வேலையில் அனேகம் சச்சரவு ஏற்படுவதுண்டாதலால் கிராமாதிகாரியாகிய அவனுக்கு மிக்க வேலையிருந்தது.

இரங்கநாதம் பிள்ளையின் மனைவி வீட்டிலிருந்தாள். அவள் முருகப்பனைக் கப்பற்சேதமடைந்த மனிதனிடம் அழைத்துச் சென்று அவனை நோக்கி, "இதோ இக்கிராம முதலாளியின் புத்திரர். நீ எங்களிடம் உன் பெயர் முதலியவற்றைக் கூற மறுத்தாலும் இவரிடமேனும் கூறு. இவர் உதவியின்றேல் நீ யாரிடமும் உயிரோடு பேசியிருக்கவே மாட்டாய்" என்று கூறினாள்.

அவள் மொழிகளைக் கேட்டதே அம்மனிதன் எழுந்து முருகப்பனுடைய கரங்களைப் பற்றிக்கொண்டு "தாங்களே என் பிராணனைக் காப்பாற்றியவரென்று நான் அறிகிறேன். என் மற்ற பொருள்களெல்லாம் காற்றாய்ப் பறந்துவிட்டன போலும்" என்றான்.

முரு:—"உன் கப்பலோட்டும் திறமைதானென்ன? புயலடிக்கத் தொடங்கும்போது சம்புமுனை யுனக்கு நெடுந் தூரத்திலிருக்குமே. நீ யுன் கப்பலை யிங்குவராதபடி தடுத்திருக்கலாமே" என்றான்.

அவ்வாறு சொல்லிப் பிறகு, வீட்டுக்காரியை நோக்கி "அம்மா! நீ தயவுசெய்து சற்றுநேரம் எங்களை விட்டுச்

செல். நான் இந்தப் பெரிய மனிதரிடம் இரகசியமாய்க் கொஞ்சம் பேசவேண்டும்'' என்றான்.

**அம்மாது:**—"பெரியமனிதன்! பார்வைக்கு அப்படித் தோன்றுவதைப்பற்றி நான் ஒன்றும் கூறமுடியாது. ஆனால் இவனிடம் உண்மையில் பெரிய மனிதத் தன்மை அவ்வளவு இருக்கிறதா என்பதைப்பற்றி நான் சந்தேகிக்கிறேன்'' என்றாள்.

முருகப்பன் அம்மனிதனை யுற்றுநோக்கியபோது அவனுக்கு வேறு விதமாகத்தோன்றியது. அம்மாது அவனைப்பற்றிக் கூறிய அபிப்பிராயம் அவனுக்கு ஒப்ப வில்லை. அம்மனிதன் நடு உயரத்திற்குச் சற்று அதிகமாக விருந்தான். அழகும் பலமுமுடையவனாகவிருந்தான். முருகப்பன் அனேக மனிதரிடம் சகவாசம் செய்து பழக்க முடையவனல்ல. அவன் நோக்கத்திற்குத் தன் எதிரிலிருக்கும் மனிதன், பலவிதச் சீதோஷ்ணங்களையுடைய பூமிகளில் சஞ்சரித்தவனென்பதும், அதனால் சிவந்து வாடிய முகமுடையவனென்பதும், மாலுமிகளுக்குரிய களங்கமற்ற மனமுடையவனென்பதும் புலப்பட்டன. தன் தேக சுகத்தைப்பற்றி முருகப்பன் கேட்ட கேள்விகளுக்கு அவன் சந்தோஷமாகவே விடையளித்ததோடு கிராமாதிகாரியாகிய இரங்கநாதம் பிள்ளையினுடையவும் அவன் மனைவியினுடையவும் பேராசையைப்பற்றியும் மற்ற குணங்களைப்பற்றியும் வருத்தத்தோடு கூறினான்.

மேலும் அம்மனிதன் மனவருத்தத்தோடு முருகப்பனை நோக்கி "வாயாடியாயுள்ள இம்மாது சேதமடைந்த கப்பலின் பெயரைக் கூறச்சொல்லி என்னை மிக்க தொந்தரை செய்தாள். நாள் முழுமையும் அவள் அதைப்பற்றியே தொந்தரை செய்தாள். அக்கப்பலிலிருந்து அகப்பட்ட கொள்ளைப் பொருள்களில் தனக்குக் கிடைத்த

தோடு இவள் திருப்தியாயிருப்பாள் என்று நான் நம்பினேன். அங்குச் சேதமடைந்த கப்பலின் சொந்தக்காரன் நானே. இவர்கள் மிக்க தயவாய் நான் அணிந்திருக்கும் உடையோடு என்னை விட்டார்கள். இந்த ஊரில் என் போல் கப்பற்சேதமடைந்தவர்களுக்கு உதவி செய்யத் தக்க நியாயாதிபதிகள் இல்லையோ?'' என்றான்.

முரு:—''இத்தீவின் முதலாளியாகிய தைரியநாதர் இருக்கிறார்; நீதவான் ஒருவர் இருக்கிறார்; இவர்கள் தான் இத்தகைய சமையத்தில் உதவி செய்யவேண்டியவர்கள். நான் இன்னும் விவகாரமறியாதவன்; என் தந்தையோ எந்த விஷயத்திலும் பிரவேசிக்காமல் மிக்க அடக்கமாய் இருப்பவர். இதனால் நாங்கள் இத்தகைய விஷயங்களில் உதவி செய்யக் கூடியவர்களாயில்லை—'' என்றான்.

அம்மனிதன்:—''இல்லை யில்லை; உங்கள் வரையில் நீங்கள் எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவும் செய்தீர்கள். அதிலும் நீங்கள் செய்தது முதலுதவி. அதுவே யென்னுயிரைக் காப்பாற்றியது. அதில்லாவிடின் பிறகு என்ன உதவி வந்தும் என்ன பயன். அவை சவத்திற்கே உதவியாகும். ஓ கடவுளே! என்னிடமிருந்த தைரியம் பொருந்திய நாற்பது ஆட்களில் ஐந்து பேரேனும் இப்போது கடலுக்கிரையாகாமலிருந்தால், நானே செய்து கொள்ளவேண்டிய வேலைக்காக இன்னொரு மனிதன் உதவியை நான் கோரவே மாட்டேன்'' என்றான்.

அம்மொழிகளைக் கேட்ட முருகப்பன் மிக்க வியப்படைந்து "ஆ! நாற்பது ஆட்களா? உன் கப்பலின் அளவை நோக்க அதிக ஆட்களென்றே கூறவேண்டும்'' என்றான்.

அம்மனிதன்:—எங்களுக்கு எவ்வளவு ஆட்கள் அவசியம் வேண்டுமோ அவ்வளவில்லை. எங்களிடம் பத்துப் பீரங்கிகளும் சில தூரஞ்செல்லும் துப்பாக்கிகளுமிருந்தன. பிரயாணத்தில் எங்கள் ஆட்கள் குறைந்துவிட்டார்கள். சாமான்கள் அதிகமாய் விட்டன. ஆட்கள் மட்டுமிருந்தால் நாங்கள் இம்மாதிரியாய் வந்து சிக்கிக்கொண்டிருக்க மாட்டோம். இருந்த ஆட்கள் கப்பலில் ஏறிய நீரை யிறைத்து இறைத்துக் களைத்து வெறுப்படைந்து படகுகளில் ஏறிப்போய்விட்டார்கள். என்னை யென் கப்பலோடு விட்டு விட்டார்கள். ஆனல் அந்த நாய்கள் தங்களுக்குக் கிடைத்ததைக் கொள்ளையடித்துச் சென்றூர்கள். நான் அவர்களை மன்னிக்கவேண்டியதே. கடைசியில் கப்பல் மணல் திட்டில் சிக்கியழிய இதோ நான் மட்டும் தப்பியிருக்கிறேன்.

முரு:—அப்படியிருந்தால் நீ மேற்குத் தீவுகளிலிருந்து வடகடலின் மார்க்கமாய் வந்தவன் போலும்.

அம்:—"ஆ! என் கப்பலின் பெயர் நன்னம்பிக்கை. அது பிரிய நகர்க் கப்பல். அது பிரயாணத்தின் ஆரம்பத்தில் வரத்தக விஷயங்களிலும் எங்கள் சொந்த விஷயங்களிலும் நல்லதிஷ்டத்தையே யடைந்தது. இப்போது யாவும் முடிவிற்கு வந்து விட்டது. நான் அதின் கப்பித்தான். என் பெயர் குலசேகரன். நான் பிரிய நகரில் பிறந்தவன். அங்கு என் தந்தை பிரசித்தி பெற்றவர்" என்றான்.

முருகப்பனுக்கு அம்மனிதனுடைய பேச்சில் திருப்தியுண்டாகவில்லை. அவன் பேச்சு ஒருவிதமான குரோதத்தோடு பேசப்பட்டதாக அவனுக்குத் தோன்றியது. தன் ஊராரில் சிலர் அவனுக்கு அக்கிரமம் செய்தது உண்

மையே யெனினும் அம்மனிதன் யாவரையுமே யதில் சம்பந்தப்படுத்திப் பேசியதுபோ லிருந்தது. அவனுடைய தந்தையைப்பற்றி விசாரிக்க முருகப்பனுக்கு நியாயமில்லை. தான் மட்டும் அவனுக்கு உதவியே செய்திருக்கிறான். ஆயினும் இனியும் உதவியே செய்வதாகக் கூறலாமா அல்லது இதோடு பேசாமற் போய்விடலாமாவென்று முருகப்பன் சிந்தித்தான்.

குலசேகரன் அவன் எண்ணத்திலிருப்பதை யறிந்து கொண்டவன்போல் சலகரணையாய்ப் பேசத்தொடங்கி "உன் பெயர் முருகப்பா என்று நினைக்கிறேன். முருகப்பனே! நான் மனம் விட்டுப் பேசும் சுபாவமுடையவன். நான் இப்போது துரதிஷ்டத்தில் அமிழ்த்தப்பட்டேன். இதனால் என் குணம் சற்று தடுமாற்ற மடைவது இயற்கையே. நீ எனக்கு மிக்க அன்போடு உன்னால் ஆன உதவியைச் செய்திருக்கிறாய். நான் இதைவிட்டுச் செல்லுமுன் என் நேர்த்தியான வேட்டைத் துப்பாக்கியை யுனக்களிக்கிறேன். அது மிக்க நேர்த்தியான துப்பாக்கி. அதில் குண்டும் போட்டுச்சுடலாம். எனக்காக நீ யதை வைத்துக் கொள்ளவேண்டும்" என்றான்.

முரு :—அதைப் பெற்றுக்கொள்வதானால் நானும் சேதமடைந்த கப்பற் சாமான்களில் ஒருபாகம் பெற்றுக் கொண்டதாகும்.

குலசேகரன் "அப்படி நினைக்க வேண்டாம்" என்று கூறிக்கொண்டே தன் பெட்டியைத் திறந்து அதிலிருந்து துப்பாக்கிகளை முருகப்பனுக்குக் காட்டி, "இதோ பார், நான் என் ஆயுதங்களையும் உடைகளையும் காப்பாற்றிக் கொண்டேன். அந்தக் கறுப்புடை யணிந்த உயரமான கிழவி(நாகம்மாள்) யால் இவை காப்பாற்றப்பட்டன. உன்னிடம் கூறுகிறேன். நான் இழந்துவிட்ட பொருள்கள்

அனைத்திற்கும் ஈடாக இவைபோதும். நான் அழிந்துபோய் விட்டதாக விந்தப் பேய்களின் எதிரில் கூறியதால், நான் சொத்திலும், பலத்திலும் அடியோடழிந்துவிட்டதாக நினைக்கவேண்டாம். இல்லை. இதோ மணல் தட்டில் சிக்கி யிருக்கும் அக்கப்பலைச் சீக்கிரம் சரிப்படுத்திக்கொள்ளப் போதுமான பொருள் என்னிடமிருக்கிறது” என்று கூறிக்கொண்டே பெட்டியின் அடிப்பாகத்திலிருந்த தங்க நாணயங்கள் நிறைந்த பைகளை யவனுக்குக்காட்டி “நான் மறுபடி ஒருகப்பலைத் தயாரிக்கப்போதுமான பொருள் என்னிடமிருக்கிறது. இப்போது இத்துப்பாக்கியை நீ ஏற்றுக் கொள்வாயல்லவா?” என்றான்.

முரு:—நீ யிவ்வளவு அன்பாய் இதை யெனக்களிப்பதால் நான் எடுத்துக்கொள்கிறேன். அவ்வாறே நான் ஒன்று கேட்கிறேன். அதுவும் என் தந்தை கூறிய கட்டளைப்படி. அதாவது உனக்கு ஏதேனும் பண உதவி வேண்டியதாயின் மனம் விட்டுக் கூறினல் அத் தொகையைக் கொடுக்கும்படி என் தந்தையெனக்குக் கட்டளையிட் டிருக்கிருர்.

குலசேகரன்:—உங்கள் உதவிக்காக மிக்க வந்தனமளிக் கிறேன். ஆனல் என்னிடம் போதுமான பணமிருக் கிறதென்பதை நீ பார்க்கிருய். இந்தத் துப்பாக்கி உன்னிடம் நல்ல வேலைசெய்யும். என்னிடம் செய்த வேலைகளைச்செய்யாவிடினும், கூடியவரையில் உனக்கு அனுகூலமாகவிருக்கும்.

முரு:—என் தந்தை நான் சீக்கிரம் யாத்திரை சென்று பல தேசங்களைப் பார்த்துவர வேண்டுமென்று கூறு கிருர்.

குல:—ஆ! நான் அதைப்பற்றியே கூறவிருந்தேன். நீ புத்தி நுட்பமும் தேகபலமும் சுறுசுறுப்பும் உடைய வாலி

பன். ஏன் என்போன்றவர்கள்கூட ஒரு பயணம் வர லாமே. உன் தந்தை யத்தகைய எண்ணம் கொண் டிருப்பதற்காக நான் மிக்க சந்தோஷமடைகிறேன். நான் இங்கிருந்து நங்கூரம் தூக்கு முன் உன் தந்தை யைக் காண்பேன். நீ மட்டும் எங்களோடுகூடவரின் நான் உனக்காகக் கப்பலின் மேல் தட்டில் ஒரு அறை ஆயத்தம் செய்து வைப்பேன். சீக்கிரத்தில் உன்னை யொரு முதல்தர மாலுமியாக்கி விடுவேன்.

முரு:—எனக்கு அத்தகைய விஷயம் மிக்கபிரியமே. ஆனால் அதைப்பற்றி என் தந்தையே முடிவுசெய்யவேண்டும்.

குல:—உன் தந்தையா? அதோ அந்தப்பெரிய மாளிகை யில் வசிக்கிறாரே அவர் தானே? நானே நேராய் அவ ரைக் கண்டு இதைப்பற்றிப் பேசுகிறேன்.

முரு:—ஆம். அந்தப் புராதனப்பாழடைந்த வீட்டில் தான் நாங்கள் இருக்கிறோம். ஆனால் என் தந்தை யொரு வரையும் காண்பதில்லை.

குல:—அப்படியாயின் இவ்விஷயத்தைப்பற்றி நீயே யுன் தந்தையிடம் முடிவு செய்துகொள்ளவேண்டும். நான் ஒரு நியாயாதிபதியிடம் சென்று என் கப்பலின் சேதத்தைப்பற்றி அறிவிக்கவேண்டும். உன் தந்தை நியாயாதிபதியாக விராத வரையில் நான் தைரிய நாதன் என்பவரைப் போய்க் காணவேண்டும். அவர் நியாயாதிபதி யல்லவாயினும் இத்தீவின் தலைவராத லால் அவர் அத்தொழிலுக்குப் போதுமானவர். இப் பயல்கள் கொண்டுபோன பொருள்களில் இரண்டு மூன்றிருக்கின்றன. அவற்றை நான் கைப்பற்ற வேண்டும். மற்றவைகளை யவர்கள் எடுத்துக்கொண்டு அவற்றோடு எப்படியேனும் அழிந்துபோகட்டும். அவற்றைப்பற்றி யெனக்கு அவசியமேயில்லை. நான்

அந்தத் தலைவனுடைய அறிமுகம் பெறுவதற்காக நீ எனக்கு ஒரு கடிதம் கொடுக்கக்கூடு மல்லவா?

முரு:—"நான் அத்தகைய கடிதம் கொடுப்பது அனாவசியமே. ஏனெனில் நீ 'நான் கப்பற்சேதமடைந்து வந்தேன். எனக்கு உதவிவேண்டும்' என்று கூறினால் அவ்வளவே போதும். ஆயினும் எதற்கும் நான் உன்னைப் பற்றி ஒரு கடிதம் அவருக்கு எழுதிக் கொடுக்கிறேன்" என்றான்.

குலசேகரன் உடனே தன் பெட்டியிலிருந்து கடிதம் பேனா முதலியவற்றை யெடுத்து, "இதோ எழுது கருவிகள் பூரணமாகவிருக்கின்றன" என்று அவனிடமளித்தான்.

முருகப்பன் அத்தீவின் முதலாளியாகிய தைரியநாதனுக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருக்கையில் குலசேகரன், தான் திறக்கப்பட்ட பெட்டியில் மேல் மூடியின்மேல் ஆணிகளை வைத்து முடுக்கத் தொடங்கினான். அதற்குவேண்டிய ஆணிகள், மரைகள், திருப்புளி முதலியயாவும் அவனிடம் இருந்தன. பிறகு பெட்டியிலிருந்து தனக்குவேண்டிய உடைகள் முதலியவற்றை யெடுத்துக்கொண்டு பெட்டியை மூடிப் பூட்டினான். தான் எடுத்துக்கொண்ட உடை முதலியவற்றை யொரு பிரயாணப்பையில் வைத்துக் கொண்டு பெட்டியைக் கயிற்றால் நன்றாகக் கட்டினான். பிறகு முருகப்பனை நோக்கி "இப்பெட்டியை யுன் பொறுப்பில் வைக்கிறேன், இதோ இந்தப் பொன் நாணயங்களடங்கிய பையையும் வைக்கிறேன். இந்தப் பட்டயம் கைத் துப்பாக்கிகள்மட்டும் என்னிடமிருக்கட்டும். இவையென்னிடமிருந்தால் இப்போதுநேர்ந்ததுபோன்ற ஆபத்து இனி எனக்கு நேராது" என்று சொன்னான்.

---

## 14-வது அத்தியாயம்.

முருகப்பன் குலசேகரனை நோக்கி "நீ இங்கு இவ்வளவு எச்சரிக்கை யெடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் இத்தீவில் ஒருவன் ஒரு பொன் மூட்டையைத் தோளின்மேல் வைத்துக்கொண்டு ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரைக்கும் செல்லலாம். ஒருவரும் அவனுக்குத் தீங்கிழைக்க மாட்டார்கள்" என்றான்.

குல:—"பேஷ்; இதே சமயம் வெளியில் நடந்துகொண்டிருக்கும் விஷயங்களை நோக்கில் நீ கூறுவது மிக்க துணிகரமான மொழிகளே" என்றான்.

அம்மொழிகளைக் கேட்ட முருகப்பன் உண்மையில் மனக்கலக்க மடைந்துவிட்டான். ஏனெனில் அதேசமயம் அவ்வூரார் கப்பற் சேதத்திலிருந்து கொள்ளையடித்து வந்த பொருள்களைப் பங்கிட்டுக்கொண் டிருக்கிறார்கள். கடைசியில் முருகப்பன் குலசேகரனை நோக்கி,

"ஓ! கப்பற் சேதமடைந்ததால் கடலால் வெளியில் எறியப்படும் பொருள்கள் கடவுள் தயவால் தங்களுக்கு அனுப்பப்பட்ட சொத்துக்களென்று ஜனங்கள் கருதுகிறார்கள். அவற்றை யெடுத்துக்கொள்வது அநீதம் என்று அவர்கள் அறியவில்லை. மூடர்களானதால் இந்த விஷயம் அவர்களுக்கு விளங்கவில்லை" என்றான்.

குல:—என் பெட்டியைப் பத்திரமாய் உங்கள் வீட்டில் வைத்துக்கொண்டிருந்து, பிறகு அதை யெடுத்துச் செல்லவும் வழிகாட்டவும் எனக்கு ஒரு ஆளை உதவி செய்கிறாயா?

முரு:—நீ கடல்வழி செல்கிறாயோ? தரைவழி போகிறாயோ?

குல:—கடல் வழியாகவா? இத்தகைய சிறிய கப்பலில்-

இல்லை யில்லை. எனக்கு ஆட்கள் கிடைத்து, என் கப்பலும் கைக்கு வந்து மற்ற சௌகரியங்களும் ஏற்படும் வரையில் கரைவழிதான்.

அந்த ஏற்பாட்டின்படியே முருகப்பன் அவன் பெட்டியைத் தன் வீட்டிற்கு ஒரு ஆள்வசம் எடுப்பித்துக் கொண்டு, தைரியநாதர் இருக்கும் வசந்த மாளிகைக்கு வழிகாட்ட ஒரு ஆளை யமர்த்திக் குலசேகரன் கூட அனுப்பினான்.

* * * *

மறுநாட்காலை முருகப்பன் தன் தந்தையைக் கண்டபோது தந்தை, "கப்பற்சேதமடைந்த மனிதன் எப்படியிருக்கிறான்?" என்றான். முருகப்பன் கப்பற்சேதமடைந்த மனிதனைப்பற்றி ஒரு விதமாய்க் கூறினான். அதைக் கேட்டதே மார்க்கசேனன் மனக்கலக்கமடைந்து சட்டென்றெழுந்து தான் மனோவியாகூலமாக விருக்கும் போது வழக்கமாகப் போய்த் தங்கும் அறைக்குள் போய் விட்டான். அப்பகல் முழுமையும் அவன் வெளியில் வரவேயில்லை. மாலைப்போது அவன் சாதாரணமான மனநிலைமையோடு அறையினின்றும் வெளிவந்தான். ஆனால் முருகப்பன் தன் தந்தைக்கு வருத்தத்தை யுண்டாக்கும் அச்சங்கதியைப்பற்றிப் பேசவில்லை.

முருகப்பன் தன் வரையில் புதிதாய் வந்த அம்மனிதனைப்பற்றிச் சிந்தித்துப்பார்த்தான். கடைசியில் அவன் விஷயத்தில் அவ்வளவாய்த் திருப்தியான அபிப்பிராயம் ஏற்படவில்லை. அவனிடம் வெறுப்படையத்தக்க ஏதோ விஷயங்கள் இருப்பனபோல் முருகப்பனுக்குத் தோன்றின. அவன் அழகுடையவனாகவும், களங்கமற்ற மனமுடையவனாகவும், வசீகரமுடையவனாகவும் தோன்றினாலும் அவனிடம் ஒருவித அதிகார தோரணையான குண

மிருந்தது. அது முருகப்பனுக்குப் பிடிக்கவில்லை. முருகப்பனுக்கு வேட்டையில் மிக்க பிரியமானதால் குலசேகரன் கொடுத்த துப்பாக்கியைப் பெற்றுக்கொள்ளப் பிரியமிருந்தாலும், அதைப் பெற்றுக்கொள்வது நீதியாக அவனுக்குப் புலப்படவில்லை. அதனால் அவன் "நான் இதைப் பெற்றுக்கொள்ளலாகாது; ஒரு சமயம் அவன் நாம் செய்த சொல்ப உதவிக்கு இதை யீடாக வெண்ணிக் கொடுத்திருக்கலாகும். ஆயினும் இதை வாங்க மறுப்பதும் நியாயமல்ல. இவன் வேறு விதமான மனிதனாகவிருந்தால் நன்றாக விருந்திருக்கும்" என்று தனக்குள் சிந்தித்துக்கொண்டான்.

முருகப்பன் குலசேகரனை விட்டுப் பிரிந்தபின் அவன் கொடுத்த துப்பாக்கியால் இரண்டொரு நாட்கள் வேட்டையாடியபோது, அவன் கொடுத்த துப்பாக்கிக்கு இணையான துப்பாக்கியைத் தான் இதுவரையில் பார்த்ததில்லை யென்பது அவனுக்குத் தோன்றியது. குலசேகரன் தன்னோடு வரும்படி அவனை அழைத்தது அவன் மனதில் நிலையாயிருந்தது. கடலில் பிரயாணம் செய்வதே அவனுக்குத் திருப்தியானதாகத் தோன்றியது. ஆனால் குலசேகரன் கூடச் சென்றால் அவன் எஜமான்போல் நம்மேல் அதிகாரம் காட்டுவானோ என்ற சந்தேகம் அவனுக்குள் இருந்தது. எனினும் அவன், "ஆயினும், நாம் அனேக புதிய விடங்களைக் காண்போம்; அனேக அதிசயமான காட்சிகளைப் பார்ப்போம்; அபூர்வ சம்பவங்கள் அனேகம் நேரிடும்; யாத்திரையினின்றும் திரும்பி வந்தபின் வசந்த மாளிகையிலுள்ள நமது காதலிகளாகிய மீனாளிடமும் புனிதவதி யிடமும் அவற்றைக் கூறலாம்" என்று சந்தோஷத்தோடு தனக்குள் சிந்தித்துக்கொண்டான். அவன் விவகாரங்கள் எங்கு எவ்வளவு நடந்தாலும் அவை யாவற்

றிற்கும் முடிவிடம் வசந்தமாளிகையே யென்று அவன் கருதி யிருந்தான். அந்த விடம் அவன் மனதை யிழுக்கும் ஒரு மின்சாரச் சக்தியாயிருந்தது.

முருகப்பன் தான் குலசேகரனைக் கண்டு பேசிய விஷயங்களைப்பற்றித் தன் தந்தையிடம் கூறலாமென்று இரண்டொரு முறை கருதினான். ஆனால் தான் முதலில் அவனைப்பற்றிக் கூறிய சில விஷயங்கள் தன் தந்தையின் மனதில் உண்டாக்கிய உணர்ச்சி யவனுக்குத் திருப்தியாக வில்லையாதலின் அதிகமாய்க் கூற அவனுக்கு மனம் சம்மதிக்கவில்லை. குலசேகரன் தன்னைக்கூட வரும்படி யழைத்த சங்கதியைப்பற்றிக் கூற இன்னும் அவகாசம் இருக்கிறதென்றும், அதற்குள் குலசேகரன் மறுபடி அதைப்பற்றிக் கூறுவானென்றும் கருதினான். முன்பு குலசேகரன் தன்னிடம் பேசியபோது அந்தத்தீவில் தான் தன் காதலியை யெதிர்பார்ப்பதாகவும் அவளைச் சந்தித்த பின்பேதான் தீவைவிட்டுப் புறப்படுவதாகவும் கூறியிருந்தபடியால், அவன் தன் காதலியைக் கண்டபின் பிரயாணப்படும்போது நம்மைக் காண்பான், அப்போது நம் தந்தையிடம் யாவும் கூறுவோம் என்று முருகப்பன் கருதினான். அச்சம்பவங்கள் சீக்கிரமே நேரிடுமென்றும் அவன் எண்ணினான்.

ஆனால் நாட்கள் வாரமாயின-வாரங்கள் மாதங்களாயின. குலசேகரனைப்பற்றி ஒரு சங்கதியும் தெரியவில்லை. அப்படி யிருக்க எப்போதோ ஒரு முறை யங்கு வந்த ஹாக்கர் சுந்தரம்பிள்ளை, காப்டென் (கப்பித்தான்) குலசேகரன் வசந்தமாளிகையில் அக்குடும்பத்தாரில் ஒருவன் போல் வசித்துக்கொண் டிருக்கிறான் என்று கூறினான். அம்மொழிகளைக் கேட்ட முருகப்பன் மிக்க வியப்படைந்தான். தைரியநாதம் பிள்ளையின் உதார குணப்படி அவன்

வீட்டிற்கு வருகிற விருந்தாளி தன் மனம் சலிக்கிறவரை யங்கிருக்கலாம் என்பது யாருமறிந்த விஷயமே யென் பதை முருகப்பன் அறிவானெனினும் இவ்விஷயம் அவ னுக்கு மிக்க வியப்பாகவே யிருந்தது. ஏனெனில் குல சேகரன் தீவின் வடபாகத்தில் தன் காதலி யிருப்பதாய்க் கூறியிருந்தான். அப்படியிருக்க அங்கு ஏன் இவன் செல்லவில்லை. மேலும் இலவனூர்த் துறைமுகத்தில் தான் கப்பல்கள் விசேஷமாய் வருவது. அங்கு ஏன் இவன் செல்லவில்லை. அதோடு அவன் நம்மிடம் வைத்துவிட்டுப்போன பெட்டியைக்கூட வந்து இன்னும் ஏன் எடுத்துச்செல்லவில்லை. இவையாவும் ஒருபக்கமிருக்க, நாம் செய்த உதவிக்காக நமக்கு ஒரு சமாசாரமேனும் அனுப்பியிருக்கலாமே'' என்று இவ்வாறு சிந்திக்கலானன்.

முருகப்பன் மனதிலிருந்த இச்சிந்தனைகளையெல்லாம் விட அவன் மனதில் காரணம் சரியாக விளங்காமலே கலக்கத்தை யுண்டாக்கும் விஷயம் வேறென்றிருந்தது. அதென்னவெனில், இந்தக் குலசேகரன் அங்கு வரும் வரையிலும் ஒவ்வொரு வாரமும் வசந்த மாளிகையி லிருந்து முருகப்பனுக்கு ஏதேனும் சமாசாரம் வந்து கொண்டேயிருக்கும். வழிப்போக்கர்களாவது, ஊரூராய்ச சென்றுச் சில்லரைச் சாமான்களை விற்கும் ஹாக்கர்களா வது யாரேனும் அங்கிருந்து ஜலபுரத்திற்கு வந்து கொண் டிருப்பார்கள். அவர்கள் மூலமாய் இவனுக்கு அங்கிருந்து கடிதம் வந்துகொண்டேயிருக்கும். மீனட்சி ஏதேனும் வடநாட்டுப் பாட்டைப்பற்றித் தெரிவிக்கும்படியாவது, க்ஷேம சமாசாரத்தைப்பற்றியாவது வரைவாள். புனிதமும் தனக்குப் பிரியமான ஏதேனும் விஷயத்தைப்பற்றி யெழு தாமலிராள். எப்படியாவது கடிதங்கள் வந்துகொண்டே யிருக்கும். இப்போது இக் குலசேகரன் வந்தபின், சமா

சாரம் வருவது கொஞ்சங் கொஞ்சமாய் ஆலசியமாகிக் கடைசியில் சில வாரங்களாக அடியோடு நின்றே போய் விட்டது. இந்த மாறுதல் முருகப்பன் மனதில் முன்னமே உறுத்திக்கொண்டிருந்தது. ஆகையால், சுந்தரம்பிள்ளை வந்தபோது அவனைத் தந்திரமாய்ச் சில கேள்விகள் கேட்டுப்பார்த்தான். தன் மனதிலுள்ள கலவரத்தை யவன் அறியாவண்ணமாகத் தான் அக்கரையின்றிச் சாதாரணமாகக் கேட்பவன் போலவே கேட்டான். "அத்திக்கிலிருந்து நீ விசேஷ சமாசாரம் ஏதும் கொண்டுவர வில்லையோ?" என்று முடிவாய்க் கேட்டான்.

சுந்த:—விசேஷ சமாசாரமா? அப்படி யொன்று மில்லையே.

முரு:—கடற்கரையில் அதிசயமான கப்பல் விஷயத்தைப் பற்றி ஒரு சங்கதியும் கேள்விப்படவில்லையோ?

சுந்த:—சில கப்பல்கள் வந்து போயின.

முரு:—வசந்த மாளிகையில் விசேஷமொன்றுமில்லையே? அங்கு எல்லாம் க்ஷேமந்தானே ?

சுந்த:—ஆகா யாவும் சந்தோஷமே. அதிலும் கப்பற்சேதமடைந்த அந்தக் கப்பித்தான் குலசேகரன் என்பவன் வந்தது முதல் எந்நேரமும் அங்கு விருந்தும் கேளிக்கையும் நடனமுமாகவே யிருக்கின்றன.

முரு:—அக் குலசேகரன் யாரோடு நடனம் புரிகிறான் ?

சுந்த:—"ஏன் ? அவன் பிரியப்படுகிறவர்களோடெல்லாம். எனக்கு அவ்விஷயம் அவ்வளவாய்த் தெரியாது. ஆனால் வருடப்பிறப்பினன்று ஒரு சிறந்த நடனம் நடக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த நடனத்தில் இந்தக் கப்பித்தானாகிய குலசேகரனே இராஜகுமாரன்போல் தலைமை ஸ்தானத்திலிருப்பான் என்று யாவரும் கருதுகிறார்கள்" என்றான்.

அவன் கூறியவற்றைக் கேட்டதே முருகப்பன் மனதில் பலவிதக் கலக்கங்கள் ஏற்பட்டன. "என்ன! எங்கோ விருந்து திடீலென்று முளைத்து வந்த ஒருவனா அங்கு நடக்கும் நடனத்தில் தலைமை ஸ்தானத்தில் வைக்கப்படுவது" என்று சிந்தித்துக்கொண்டே சற்றுநேரம் தனக்குள்ளேயே சிந்தித்துக் கடைசியில் "இத்தனைக்கும் நாமோ அழைக்கப் படவில்லை" என்று கூறினான்.

ஹாக்கர் சுந்தரம்பிள்ளையின் செவியில் அம்மொழிகள் கேட்டன. அவன் முருகப்பனை நோக்கி "அழைக்கப் படுவதா? நீ கட்டாயம் அழைக்கப்படுவாய். அதற்கொரு சந்தேகமுமில்லை" என்றான்.

முரு:—"அவர்கள் என்னைப் பற்றிப் பிரஸ்தாபித்தார்களா ?" என்று வினவினான்.

சுந்தரம் பிள்ளை :—"நான் அதைப்பற்றித் திட்டமாகக் கூற முடியாது. ஆயினும் அதற்காக நீ அதிருப்தியடைந்து விட வேண்டாம். இதுகாறும் அங்கு வருகிறவர்களெல்லாம் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த ஏற்பாட்டைப்பற்றி நான் காதார நன்றாகக் கேட்டேன். கடவுள் உனக்கு மிக்க கீர்த்தியை யுண்டாக்குவார். ஆகையால் அந்த விருந்திற்கு நீ யழைக்கப்பட்ட மாதிரியே. உன்வரையில் நீ ஆயத்தமாயிரு. இதோ என்னிடம் நேர்த்தியான பட்டு மேற்சட்டை யிருக்கிறது. இது உனக்கே தைக்கப்பட்டதுபோல் பொருத்தமாகவிருக்கும். இதை யணிந்துகொண்டு அங்கு சென்றால் நீயே இராஜகுமாரனாகத் தோற்றப் படுவாய்" என்றான்.

ஹாக்கருடைய எண்ணமனைத்தும் தன் சரக்கையவன் வாங்கும்படி செய்யவேண்டுமென்பதே. முருகப்பனுடைய செவியில் ஹாக்கர் கூறுவது விழுந்தபோதிலும்

அவன் வேறு கலக்கமான சிந்தனையில் முழுகியிருந்தான். காதல் தீ மகா கொடியது. அதோடு அதில் பொறுமை நெய்யை யூற்றிவிட்டால் எவ்வளவு தீட்சணியமாகவிருக்கும். குலசேகரன் இத்தீவில் தன் காதலி யிருப்பதாகக் கூறினன். இப்போது அவன் வசந்தமாளிகையில், மீனுட்சியும் புனிதவதியும் இருக்கும் வீட்டில் தங்கியிருக்கிறன் என்றும் அங்கு அவன் சிறப்பாய் நடத்தப்படுகிறன் என்றும் தெரியவந்தது. இன்னும் வேண்டிய சாட்சியத்திற்கு அக்கன்னிகைகளிடமிருந்து இதுகாறும் அடிக்கடி வந்து கொண்டிருந்த கடிதம் கொஞ்சகாலமாய் அடியோடு நின்று விட்டிருக்கிறது.

இக்காரணங்களாலெல்லாம் முருகப்பன் மனதில் பெரிய சந்தேகமுண்டாகிவிட்டது. அதாவது குலசேகரன் வசந்தமாளிகையிலுள்ள இரண்டு கன்னிகைகளில் ஒருத்தி மேல் காதல்கொண்டிருக்கவேண்டும் என்று அவன் புத்தியிற் பட்டது. அதிலும் குலசேகரன் தன் காதலி யிருக்கிறளென்று கூறியது இவர்களில் ஒருத்தியைத்தானே வென்று நினைத்தபோது அவன் மனம் பெரிய வேதனையடைந்தது. அதனலவன் அறையில் முன்னும் பின்னுமாகத் திரிந்துகொண்டிருந்தான்.

ஹாக்கர் சுந்தரம் பிள்ளை அவன் வியாகூலத்தைப் பற்றித் தவருக அர்த்தம் செய்துகொண்டான். அவன் நாட்டமனைத்தும் தன் சாமான்கள் விலையாவதின்மேலேயே யிருந்தபடியால் "அடடா! சட்டையை வாங்க இவனிடம் போதுமான பணமில்லைபோலிருக்கிறது. அதனல்தான் இவன் வியாகூலப்படுகிறன்" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டான். அதன்மேல் மிக்க அன்போடு அவனை நோக்கி "நண்பனே! நீ இதற்காக மனக்கலக்கமடைய வேண்டாம். நான் நிர்த்தாட்சண்யமான மனிதனல்ல. அதி

னும் நண்பர்களிடத்தில் அப்படி நடந்துகொள்ளமாட்டேன். உன்னிடமிருக்கும் பணத்திற்குத் தக்கமாதிரியான உடையளிக்கிறேன். அப்படிக்கின்றேல் நான் மறுபடி வரும்போது இப்பணத்தைப் பெற்றுக்கொள்கிறேன். இன்றேல் பிறகு வரும்போது பெற்றுக்கொள்கிறேன். என்னிடம் எவரையுமே பணத்திற்காகத் துரிதப்படுத்தும் வழக்கமில்லை. அப்படியிருக்க, என் சினேகிதனையா அதற்காக நான் துரிதப்படுத்துவேன். ஒருகாலுமில்லை. உனக்கு வேண்டியதை யெடுத்துக்கொள். நீ சற்றும் கலக்கமடைய வேண்டாம்" என்றான்.

முருகப்பன் "அவர்கள் என்னை யழைத்தாலும் அழைக்காவிட்டாலும் நான் அங்கிருப்பேன்" என்று கூறிக்கொண்டே சட்டையை யெடுத்துக்கொண்டான்.

**ஹாக்கர்:**—"இது நல்ல உயர்தரமானது. கணக்கில் பதிவு செய்துகொள்ளட்டுமா?" என்றான்.

**முருகப்பன் :**—"வேண்டாம் வேண்டாம்" என்று தன் பணப் பையை யெடுத்து என்ன விலை யென்று கேட்டு அவன் கூறிய விலையைக் கொடுத்துவிட்டான்.

ஹாக்கர் அப்பணத்தைப் பெற்றுக்கொண்டு, "இந்தச் சட்டை ஆறு வருடங்களுக்கு முன் இங்கு வந்து கரை தட்டிய ஒரு கப்பலிலிருந்த ஒரு கப்பித்தானுடையது. அவன் மிக்க பிரசித்திபெற்றவன். இதையணியும் நீயும் அவனினும் மிக்க பிரசித்திபெறுவாய். கடவுள் உனக்கு மிக்க செல்வாக்கை யளிக்கப்போகிறார். உலக அனுபவமுடைய நான் கூறும் வாக்குத் தப்பாது........" என்று கூறிக்கொண்டேயிருந்தான்.

அச்சமயம் வீட்டுக்காரியஸ்தி யங்கு வந்தாள். முருகப்பன் அவள் பேசுவதற்கு இடம் கொடுக்க விரும்பாத

வன்போல் தன் பணப்பையை யவள்முன் எறிந்துவிட்டுத் துப்பாக்கியை யெடுத்துக்கொண்டு வெளியிற் சென்றான்.

---

## 15-வது அத்தியாயம்.

முருகப்பன் தன் வேட்டைச் சாமான்களை யெடுத்துக்கொண்டு வெளியிற் செல்வதைக் கண்ட ஹாக்கர் சுந்தரம்பிள்ளை, அவன் உருவம் மறையும் வரையில் வியப்போடு பார்த்துக்கொண்டே யிருந்தான். வீட்டுக்காரியஸ்தியாகிய சுந்தரம்மாளும் திப்பிரமை யடைந்து அவன் நடக்கையின்னதென்றறிய முடியாதவளாய்ப் பார்த்துக் கொண்டே நின்றாள். அவள் கடைசியில், "அடடா! இவ் வாலிபனுக்கென்ன புத்தி சபலம் நேர்ந்ததோ?" என்றாள்.

ஹாக்கர்:—"புத்தி சபலமா? ஏன்? இவன் தன் தந்தையைப்போல் ஒரு முரடனாகி விடுவான். என்ன பதினைந்து ரூபாய் விலையுள்ள அந்தச் சட்டையை அவன் அலட்சியமாய் எப்படி எடுத்தான் தெரியுமா?" என்றான்.

அவன் கூறிய மொழிகளைக் கேட்ட காரியஸ்தியாகிய சுந்தரம்மாளுக்கு ஒரு விஷயமே மனதிலுறுத்தியது. அதாவது அவன் முருகப்பனுக்கு விற்ற சட்டையின் விலை.

அவள் சுந்தரம் பிள்ளையை நோக்கி, "என்ன அந்தப் பழைய பச்சைக் கந்தலுக்கா பதினைந்து ரூபாய் விலை? பேஷ் இது நல்ல நேர்த்தியான பேரமே. உங்களுக்குள் நடந்த இச்சட்டையைப்பற்றிய பேரத்தில் ஒரு விஷயம் மட்டுமே எனக்குச் சரியாய் விளங்கவில்லை. அதாவது பேரம் செய்ததில் அவன் முதல்தர முட்டாளா அல்லது நீ முதல்தரமான திருடனா என்பதே யெனக்கு விளங்கவில்லை" என்றாள். இதனால் வீட்டுக் காரியஸ்தியாகிய சுந்

தரம்மாள் பாரபட்சமில்லாது தைரியமாய் நிர்த்தாட்சணியமாய்ப் பேசுபவள் என்று அறியலாகும்.

**ஹாக்கர்:**—நான் இப்போது அச்சட்டை சரியாகப் பதினைந்து ரூபாய் பெறுமானதென்று கூறவில்லை. அப்படியிருந்தாலும் அவன் பணம் அவனுடையது; அவன் இஷ்டப்படி செய்யலாம். அவன் வயது வந்தவன்; பேரம் செய்யத் தெரியாதவனல்ல. ஞாபகார்த்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமாயின் அச்சட்டை அவ்விலை பெறும்'' என்றான்.

**சுந்த:**—''ஞாபகார்த்தமாகவா? பேஷ்! இருக்கட்டும்; அதைப்பற்றி அவன் தந்தை யென்ன கருதுகிறார் என்று பார்ப்போம்'' என்றாள்.

**ஹாக்கர்:**—நீ இம்மாதிரி என் விஷயத்தில் கடுமையாய் நடந்து கொள்ளவேண்டாம். நான் எவ்வளவு தூரத்திலிருந்து அச்சட்டையைக் கொண்டு வந்தேன் தெரியுமா?

**சுந்த:**—''ஆ! நீ மிக்க தூரத்திலிருந்து உன் சரக்கைக் கொண்டு வந்ததற்கு நீ வைத்த விலையும் மிக்க நேர்த்தியானதே'' என்றாள்.

ஹாக்கர், தன்னால் கூடியவரையில் அதற்குச் சமாதானம் கூற முயன்றான். ஆனால் சுந்தரம்மாளிடம் அவன் ஜெபம் ஓங்கவில்லை. அவள் ''வியாபாரிகள் தங்களிடமிருக்கும் சரக்கை வாங்கும் ஆட்களின் நோக்கத்தையறிந்து அதற்குத் தக்கமாதிரி நடந்து கொள்ளவேண்டியதே'' என்றாள். அதன் பிறகு அவள் அந்த அறையை விட்டுச் சமையலறைக்குச் சென்று விட்டாள்.

முருகப்பன் தன் வேட்டையாடும் துப்பாக்கியையெடுத்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியிற் சென்றபோது அவன் மனதில், தன் ஆத்திரத்திற்கும் கோபத்

திற்கும் தப்பித்துக்கொண்டு போய் விடவேண்டுமென்ற ஒரு எண்ணமட்டுமே யிருந்ததன்றி வேறெவ்வித யோசனை யுமில்லை. ஏனெனில் இந்த ஹாக்கர் வந்து கூறிய சங்கதி களால் அவன் மனதில் மிக்க வியாகூலம் தோன்றிவிட் டது. அதோடு வசந்த மாளிகையிலிருந்து கொஞ்சகால மாக அவனுக்கு எத்தகைய சமாச்சாரமும் வராதபடியால் அவனுடைய மனக்கலக்கம் ஸ்திரப்பட்டு அதிகமாகி விட்டது.

முருகப்பன் முன்பு வசந்தமாளிகையில் இருந்த போது அவனே அத்தீவில் யாவரையும் விடச் சிறந்த யௌவன புருடனாகப் புகழப்பட்டான். ஆகையால் இப் போது தனக்குப் போட்டிக்காரனாக ஒருவன் வந்திருக்கிறு னென்ற சந்தேகம் தோன்றியதே, அவன் உற்சாகமனைத் தும் அடியோடு இறங்கிவிட்டது. அவன் மனம் குன்றி விட்டது. வசந்தமாளிகையிலிருந்து தனக்கு வழக்கமாய் வரும் சமாசாரம் வராததாலேயே யவன் மனம் மிக்க சந்தேகமும் குழப்பமுமடைந்து விட்டது.

தைரியநாதன் புத்திரிகள் இருவரும் அவனிடம் மிக்க விசுவாசம் காட்டி நடந்து கொண்டிருந்தார்கள். அவர் கள் அன்பில் அவன் மிக்க நம்பிக்கை வைத்திருந்தான். இப்போது அவர்களே தன்னை மறந்து விட்டார்கள், அல்லது தன்மேல் வைத்திருந்த அன்பை மறந்துவிட்டார் கள் என்று நினைக்கும்போது அவனுக்கேற்பட்ட மன வருத்தம் சொல்லொணுததாயிருந்தது.

அவன் இன்ன விடத்திற்குத்தான் செல்லவேண்டு மென்ற உத்தேசமின்றி, தான் செல்லும் பாதையையும் கவனிக்காமல் கண்மூடித்தனமாய்ச் சென்றுன். கடைசி யில் திடீலென்று தன் முன் ஓர் அகன்ற நீர் நிலை யிருப் பதைக்கண்டு நின்றுன். இப்போது இவன் முன் இருப்பது

ஒரு ஏரி. அத்தீவில் கடலோரத்தில் அத்தகைய நல்ல ஜலமுள்ள ஏரிகள் ஆங்காங்குண்டு. அவற்றினின்றும் சிறு ஆறுகளும் ஊற்றுக்களும் உள் நாட்டை நோக்கிச்சென்று கொண்டிருக்கும். அவற்றினின்றே அங்குள்ளவர்கள் சுத்த ஜலம் பெறுவார்கள். கடல் நீர் மிக்க உப்பாகவிருக் கிறதே, அதனருகில் நல்ல ஜலம் எப்படி யிருக்கும் என்று சிலர் சந்தேகிக்கலாகும். அதுதான் கடவுளது சிருஷ்டியின் அற்புதம். கடல் நீரில் அவ்வளவு உப்பிருப்பதால்தான் அதிலுள்ள எண்ணிறந்த சீவராசிகளும் ஜீவித்திருக்கவும் சுலபமாக நீந்தித்திரியவும் அனுகூலமாக விருக்கிறது. அதன் அருகில் தோண்டினல் நல்ல ஜலம் கிடைக்கும். "கடல் பெரிது; மண்ணீருமாகாது, அதனருகே சிற்றூறல் உண்ணீரும் ஆகிவிடும்" என்று ஆன்ருேர் கூறிய வாக்குப் பொய்யல்ல. சர்வக்ஞராகிய பகவானுடைய சிருஷ்டியில் எவ்வளவோ அற்புதங்களுள. அவற்றில் இதுவும் ஒன்று. முருகப்பன் அங்கு நின்று இரண்டொரு நிமிடங்கள் நிலவு வெளிச்சத்தில் தன் முன் இருக்கும் அற்புதமான காட்சி யைப் பார்த்துக்கொண்டிருந்து விட்டு, தன்மேல் மாட்டிக் கொண்டிருந்த துப்பாக்கியை யெடுத்து, நீரில் உலவிக் கொண்டும் நிம்மதியோடும் சந்தோஷத்தோடும் விளையாடிக் கொண்டு மிருக்கும் நீர்ப்பறவைகளின் கூட்டத்தை நோக் கிச் சுட்டான். அப்பறவைகள் உடனே நிம்மதி யொழிந்து கலவரமடைந்து இறகுகளைப் படபடவென் றடித்துக்கொண்டு பறக்கத் தொடங்கின.

முருகப்பன் அவற்றை நோக்கி "ஆ! பட்சிகளே! இப் போது நீங்கள் இருக்கும் நிலைமையில் உள்ளவர்கள் உல கில் அனேகரிருக்கிருர்கள். அவர்களில் நானும் ஒருவன். ஆனல் நான் துயரத்தாலுண்டான மனவெறுப்பை இந்த நிரபராதிகளான பட்சிகள்மேல் ஏன் காட்டவேண்டும்.

என் நட்பை மறந்துவிட்ட நண்பர்களுக்கும் இப்பறவைகளுக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. அடடா! நான் அந்த நண்பர்களிடம் எத்தகைய அன்பு காட்டி வந்தேன். கடைசியில் அவர்கள் திடீலென்று வந்து முளைத்த முன் பின்னறியாத ஒருவனைக் கண்டதே என்னை யடியோடு மறந்துவிட்டார்களே'' என்று தனக்குத்தானே சிந்திக்கலானான்.

அவன் அவ்வாறே சிந்தித்துக் கொண்டிருக்கையில் யாரோ தன் தோளைத் தொடுவது போல் தெரிந்ததும் திடுக்கிட்டுத் திரும்பினான். நாகம்மாள் தன் கறுப்பு உடையையணிந்துகொண்டு எதிரில் நிற்கக் கண்டான். அவன் ஒரு மேட்டின்மே லிருந்து அவளைப் பார்த்தான். அங்கிருந்து இரண்டு மேடுகளுக்கிடையிலுள்ள சந்து வழியாய் அவள் வந்தபடியால், தன் அருகில் வருகிற வரையில் அவன் அவளைக் காணவில்லை.

முருகப்பன் கூடியவரையில் கல்வி கற்றவன். ஆகையால் அற்ப விஷயங்களில் பீதியும், மூடக்கொள்கைகளில் நம்பிக்கையும் அவனிடம் கிடையா. அவன் சிறு வயதிலிருந்து பிச்சிமலை நாகம்மாளின் விஷயங்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறான். ஆயினும் அவளுடைய தெய்வீக வல்லமையில் அவனுக்கு நம்பிக்கையில்லை. உண்மையில் நாகம்மாள் தன்னைக் காணும் எத்தகைய மனிதரையும் பிரமிக்கச் செய்யக்கூடிய அபூர்வ சக்தியுடையவள் என்பதில் சந்தேகமில்லை. முருகப்பனுக்கு அவள் விஷயத்தில் இருந்தது சந்தேகமேயன்றி நிச்சயமான அபிப்பிராயமல்ல. ஆகையால் அவளைத் திடீலென்று அந்த வேளையில் அந்த விடத்தில் கண்டதே முதலில் ஒருவித பீதியே யுண்டாயிற்று. அதிலும் நாகம்மாள் ஒருவிதத் துயரத்

தோடு தன்னையுற்று நோக்குவதைக் கண்டதே அவனுக்கு மனதில் கலக்கம் தோன்றியது.

இதோடு அத்தீவாரிடம் ஒரு மூடக்கொள்கையுண்டு. அதாவது ஒருவருமில்லாதவிடத்தில் வாசஸ்தலத்திற்குத் தூரத்தில் ஒருவர் தனியாய் நாகம்மாளைக் காண்பது அவ சகுனம், அதாவது தீங்கு நேரிடும் என்பது அவர்கள் மூட நம்பிக்கை. இத்தகைய மூட நம்பிக்கையால் கெடுதி நேர்வதுண்டு. மனோ நம்பிக்கையால் எதுவும் நிகழும். "கண்டது பாம்பு கடித்ததென்னமோ மாங்கொட்டை" என்ற பழமொழிபோல்இவர்களுக்குள்ள திடநம்பிக்கையால் ஒருவர் இருவர்க்கு அவளை யவ்வாறு தனியே சந்தித்த சமயம் தற்செயலாக ஏதேனும் தீங்கு நேர்ந்திருந்தால் அக்காரணத்தால் அந்த நம்பிக்கை நிச்சயமானதாகவே பரவி விட்டிருக்கலாகும். ஆகையால் அவ்வூராரில் அவளைத் தனியே கடற்கரை, ஏரிக்கரை முதலிய விடங்களில் சந்தித்தால் நடுக்கங்கொள்ளாதவர்கள் மிக மிகச் சிலரே.

தன்னைப்பற்றி ஊரில் இம்மாதிரி நினைக்கிறார்களென்று நாகம்மாளுக்கும் தெரியும் போலும். அதோடு முருகப்பன் மனதில் உண்டான பீதியையும் அவள் ஒருவாறு உணர்ந்து கொண்டவள்போல் காணப்பட்டாள். எப்படியெனில் அவள் முருகப்பனை நோக்கி "குழந்தாய்! நான் உனக்கு எவ்விதத் தீங்கும் கொண்டுவரவில்லை. என்னிடம் இருந்து நீ ஒருபோதும் தீங்கை யெதிர் பார்க்க வேண்டாம். என்னால் உனக்கு ஒருபோதும் தீங்குண்டாகாது" என்றாள்.

முருகப்பன் தான் பீதியடைந்தது கோழைத்தனமென்று கருதி மனதைத் தைரியப் படுத்திக்கொண்டு "நான் யாருக்குமே பயப்படுவதில்லை. ஏனம்மா பயப்பட வேண்டும்? நீ எப்போதும் என்னிடம் பட்சமாகவும்

சினேகபாவத்தோடுமே நடந்து கொண்டிருக்கிருய். நீ எனக்குத் தீங்கிழைப்பாயென்று நான் கருதுவதற்கு ஒரு காரணமுமில்லையே'' என்ருன்.

நாகம்மாள்:—நீ எங்கள் சந்ததியைச் சேர்ந்தவனல்ல; இந்தச் சத்தத்தீவிலுள்ள எவர்கள் இரத்தக் கலப்பிலும் நீ சேர்ந்தவனல்ல; அப்படியிருந்தும் நான் உன் மீது அன்பு செலுத்தி வருகிறேன். தைரியநாதம் பிள்ளையின் குடும்பம் நல்ல வமிசத்தைச் சேர்ந்தது. அவர்களிடமும் அவர்களைச் சேர்ந்தவர்களிடமும் எனக்கு அன்புண்டு. "ஓ தைரியகுணமுடைய வாலிபனே! உன் மேலிருப்பதைவிட அவர்கள்மேல் எனக்கதிக விசுவாசமுண்டு. அதோ உன் கழுத்தில் இருக்கிறதே சங்கிலி, அது சாதாரண மனிதரால் செய்யப்பட்டதல்ல. மகான்களால் அவர்களுடைய இரகசியமான குகைகளில் செய்யப்பட்டது. நான் அதையுன் கழுத்தில் கட்டியபோது உனக்குப் பதினைந்தே வயது. சாதாரண மனிதர் செல்ல முடியாத இடங்களில் எல்லாம் உன் கால்களை நீ வைத்திருக்கிருய். அப்புண்ணியத்தாலேயே நான் இந்த அரிய பொருளையுன் கழுத்தில் கட்டநேர்ந்தது. அதை நான் கட்டியது முதல் இத்தீவிலுள்ள ஒவ்வொருவரும் உன்மேல் புத்திரவாஞ்சை வைக்கத் தொடங்கினுர்கள். உன்னைத் தங்கள் சகோதரன்போல் நேசிக்கத் தொடங்கினுர்கள்'' என்ருள்.

யாவும் கேட்ட முருகப்பன் தனக்கு நேர்ந்த வருத்தத்தைக்கருதி "அம்மையே! நீ எவ்வளவோ அன்போடேயே யெனக்கு இதை யணிந்தாய். அந்தோ! என் அதிஷ்டம் சரியாகவில்லாததால், அதன் நல்ல பயன் எனக்குப் பலிக்கவில்லை. அல்லது அப்பயனைப்பெற்றுக்

கொள்ள எனக்கு நற்காலமில்லை. நான் அன்னியரிடம் எவ்வாறு நடந்து கொள்கிறேனே அவ்வாறு அவர்கள் என்னிடம் நடந்து கொள்வதில்லை. என் தந்தை நான் வெளியில் சென்று சஞ்சாரம் செய்யவேண்டுமென்று கூறுகிறார். ஆகையால் இச்சங்கிலி என்னிடமிருப்பதைவிட யாரிடமிருந்தால் நல்ல பயனளிக்குமோ அவர்களிடம் இதைக் கொடுத்துவிடு'' என்றான்.

அவன் கூறிய மொழிகளைக்கேட்ட நாகம்மாள் முன்னே கோபத்தோடு "வாலிபனே! மகான்களின் பொருளை யலட்சியம் செய்யாதே'' என்று கூறி மறு நிமிடம் சாந்தமடைந்து அன்போடு "குழந்தாய்! அதை யலட்சியமாகக் கருதவேண்டாம். அதோ அந்த வெள்ளைக் கல்லின்மேல் உட்கார். நீ என் வளர்ப்புப் புதல்வன்; அபிமானப் புதல்வன்; ஆகையால் மற்றவர்களிடம் நெருங்கிப் பேசாத நான் உன்னிடம் பெற்ற தாய்போல் பேச மனங்கொள்ளுகிறேன்'' என்றாள்.

நாகம்மாள் கூறியமாதிரி கம்பீரமாகவும் அன்புடையதாகவும் இருந்ததோடு, மனவிரக்கத்தை யுண்டாக்கக் கூடியதாகவுமிருந்தது. முருகப்பன் அவள் காட்டிய கல்லின்மேல் உட்கார்ந்தான். அது மற்ற கற்களிலிருந்து எப்போதோ அடித்த காற்றால் நகர்த்தப்பட்டு நீரின் ஓரத்தில் இருந்தது. நாகம்மாள் மூன்றடிக்கருகிலிருந்த ஒரு கல்லின்மேல் உட்கார்ந்து, தன் நெற்றியும் கண்களும், சிகையின் ஓர் பாகமும் மட்டும் வெளியில் தெரியுமாறு மேல் போர்வையை மூடிக்கொண்டு பேசத் தொடங்கினாள். அவள் பேசியமாதிரி ஏதோ பைத்தியக்காரி பேசுவது போலும், மனதில் ஆழ்ந்த துயரம் உடையவள் பேசுவது போலும் இருந்தது. அவள் பின்வருமாறு கூறினாள்:—

"குழந்தாய்! நான் இப்போதிருக்கிற மாதிரியாகவே எப்போதும் இருந்தவளல்ல. சிறியோர் பார்த்து அஞ்சவும், பெரியோர் பார்த்து மரியாதை செய்யவும், தகுதியுடையவளாய் நான் எப்போதும் இருந்ததில்லை. நான் மற்றவர் துயரைக் கண்டு மனமிரங்கியும், அவர்கள் சந்தோஷத்தைக்கண்டு சந்தோஷ மடைந்துகொண்டும் இருந்த காலத்தில் என்னைக்கண்டு ஒருவரும் அச்சப்படாத காலமும் இருந்தது. என் இளவயதில் நான் பட்டதுன்பம் சொல்லி முடியாது. முருகப்பா! நான் கூறுவதைக் கேள். என் வார்த்தைகளைப் பொறுமையாய்க் கேட்டுக் கொண்டிரு. ஏனெனில் இப்போது நான் கூறப்போகும் முறையீடுகள் இதுகாறும் 'மனிதரின் செவியில் வீழ்ந்ததில்லை. இனிமேலும் வீழப்போவதில்லை. ஒரு காலும் விழாது. நான் எப்படியிருக்கவேண்டுமோ அப்படித்தான் இருப்பேன்" என்று கம்பீரத்தோடு எழுந்து நின்று,

"ஆம் இந்த அநாகரீகமான தீவின் இராணியாகவும் பாதுகாப் பாகவுமிருப்பேன். எவளுடைய பாதங்களை அவள் அனுமதியின்றிக் கடலலை தொட முடியாதோ அவளாக நான் இருப்பேன். யாருக்குப் புயற்காற்றும் அஞ்சவேண்டுமோ, யாரின் அனுமதி யின்றி அக்காற்றும் மழையும் அவள் உடைகளை யசைக்கவும் முடியாதோ அவள் நானகவிருப்பேன். குழந்தாய்! அன்று நான் புயற்காற்றிற்குக் கட்டளையிட்டதையும் அது அடங்கிவிட்டதையும் நீ சாட்சியா யிருந்து பார்த்துக் கொண்டிருந்தாயல்லவா? கூறு" என்றாள்.

முருகப்பனுக்கு அவள் தெய்வீக சக்தி வாய்ந்தவளல்ல வென்றும் ஆனல் பைத்தியக்காரி யென்றுமே பாதி நம்பிக்கை. ஆயினும் இப்போது அவள் ஒருவித ஆவேசத்தோடும் வியாகூலத்தோடும் பேசும்போது நாம் ஏதேனும்

விரோதமாக மொழிந்தால் அவளுக்கு வருத்தமும் கோபமு முண்டாகுமென்று அஞ்சித் தந்திரமாய்ப் பதிலளிக்கக் கருதி,

"ஆம்; நீ ஏதோ பாட்டுக் கூறியதை நான் கேட்டேன்; பிறகு புயற்காற்று மெதுவாகக் குறைந்துவிட்டதையும் கண்டேன்" என்றான்.

அவன் அவ்வாறு கூறியதைக் கேட்டதே நாகம்மா ளுக்கு ஆத்திரம் வந்துவிட்டது. அவள் திடீலென்று எழுந்து நின்று தன் கரத்திலிருந்த கறுப்புக்கோலால் பூமி யைக் கோபத்தோடு குத்தி "நீ அரை யுண்மையே கூறினை; புயற்காற்று தட்டென்று உடனே, அழுகிற குழந்தை ஓயும் நேரத்திற்குள், நின்றுவிட்டது. இருக்கட்டும். எப் படியோ நீ என் வல்லமையை நேரில் கண்டாய். ஆம் கண்டாய். ஆனல் அந்த வல்லமையைப் பெற நான் எத்தகைய தியாகம் செய்தேன் என்பதைச் சாதாரண மனிதர் எவரும் அறிந்துகொள்ள முடியாது. ஆம் ஒரு வரும் அறிந்துகொள்ள முடியாது. ஒரு பலம் பொருந் திய ஏக சக்கிராதிபதியாகிய அரசனுடைய இராச்சிய முழுமையும் உனக்குக் கிடைப்பதாயினும் அப்போதும் இத்தகைய தியாகத்தை நீ செய்யவேண்டாம்" என்று கூறிவிட்டுக் கல்லின்மேல் மறுபடி யுட்கார்ந்து கொண்டு தன்மேல் போர்வையைப் போர்த்திக்கொண்டாள். அவள் மார்பு எழும்பி யெழும்பி வீழ்ந்ததால் அவள் அடக் கொணுத் துயரத்தால் தேம்பித்தேம்பி யழுகிறாள் என்று தெரிந்தது.

முருகப்பனுக்கு அவள் விஷயத்தில் உயர்ந்த நம் பிக்கை யில்லாவிடினும் அவள் மனதில் ஏதோ ஆழ்ந்த துயரம் இருக்கிறதென்று தெரிந்ததால் அவள் மீது அவ னுக்கு மிக்க இரக்கமுண்டாயிற்று. அவன் அவளை

நோக்கி "நல்லம்மையே! உன் மனதில் தீரா வியாகூலத்தை யளித்துக்கொண்டிருப்பது ஏதேனுமிருந்தால் நீ யுடனே சென்று மதகுருவினிடம் அதைக் கூறிச் சமாதானம் பெறுவது மிக்க நலம். தேக சம்பந்தமான வியாதிகளை நீக்குவதில் நீ யுன்வரையில் பிரசித்திபெற்றே யிருக்கிறாய். ஆனால் மனோ சம்பந்தமான வியாதிக்கு ஆன்மார்த்த வைத்தியனிடமே செல்லவேண்டும்" என்றான்.

அவன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட நாகம்மாள் மறுபடி மெதுவாய் எழுந்து நின்று, தன் கரங்களை விரித்துக்கொண்டு, கண்களில் அக்கினிச்சுவாலை வீச, வாயில் நுரைதள்ளக் கூச்சலிடும் சத்தத்தோடு முருகப்பனை நோக்கி,

"நீ என்னிடமா பேசுகிறாய்? என்னையா குருவினிடம் போகச்சொல்கிறாய்? நான் பரிசுத்தமான ஆண்டவனுடைய சந்நிதிக்குச் செல்வது? பாபம் அக்குருவே பயத்தால் நடுங்கிச் சாகவா? கோயிலும் அங்கு வந்து பக்தியோடு கடவுளைத் துதிக்கும் அடியார்களும் தீய்ந்து மடியவா?" என்று ஒருவிதப் பயங்கரமான ஆத்திரத்தோடு கூறினாள்.

அவள் கூறிய மாதிரியில் முருகப்பன் என்னவென்று நினைப்பது. சாதாரணமாய் யாரும் நினைக்கிறமாதிரியே யவனும் நினைக்கவேண்டும். அதாவது "இவள் பேயின் சகவாசம் வைத்துக்கொண்டிருக்கிறாள். பேயின் உதவி பெற்றே வியாதிகளை நீக்குதல் முதலிய காரியங்களைச் செய்கிறாள். இத்தகையவளிடம் நாம் அறிமுகமாக விருப்பதே மிக்க தீங்கு" என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டவனாய் அம்மாதை நோக்கி,

"அம்மையே! நீ பேயின் சினேகத்தைக் கொண்டவளாயின், இப்போதேனும் அதற்காக மனஸ்தாபப்பட்டுக் குருவிடம் சென்று உண்மையைக் கூறி அப்பாபத்தினின்று

தப்பித்துக்கொள்ளலாமே. நீ எப்படிச்செய்தாலும் செய்து கொள். இனி நான் உன் சகவாசத்திலிருக்க முடியாது. நீ அளித்த சங்கிலியையும் வைத்துக்கொண்டிருக்கலாகாது. அதனால் தீங்கு நேராமலிருந்தால் போதும்" என்றான்.

நாகம்மாள்:—"முட்டாள் பையனே! சற்றுப் பொறுமையாய் நான் கூறுவதைக் கேள்" என்று தன் மனத்திலுண்டான பீதியால் கலக்கமடைந்தவள் போல், "நான் கூறுவதைக் கேள். நான் பேய்களோடு சகவாசம் செய்யும் ஆட்களில் சேர்ந்தவளல்ல. அத்தகைய மார்க்கத்திலிருந்தல்ல நான் என் வல்லமையைப் பெற்றது. நான் பெற்ற வல்லமைகளுக்காக நான் மனிதர்க்கு வெளியிட முடியாத தியாகத்தைச் செய்தாலும், நான் செய்தது ஒரு குருடன் வழிதவறி ஒரு பள்ளத்தில் வீழ்ந்த மாதிரியே யன்றி வேறல்ல. என் மனம் பலகீனமடைந்திருக்கும் இச்சமயத்தில் என்னை விட்டுப் போகாதே-இப்பலகீனம் ஒழியுமட்டும் என் கூடவிரு. அதன்பிறகு நான் இந்த ஏரியில் வீழ்ந்து என் வல்லமையையும் என் உயிரையும் இதோடு போக்கடித்து விடுகிறேன்" என்றாள்.

---

## 16-வது அத்தியாயம்.

முருகப்பனுக்கு முன்னமே அவளிடம் அன்புண்டு. அவன் சிறுவனா யிருக்கையில் அவள் ஒரு செவிலித்தாய் போல் இவனிடம் அடிக்கடி அன்பு காட்டி வந்தாள். ஆகையால் இப்போது அவள் வியாகூலத்தோடு கூறிய சங்கதியைக் கேட்டதே அவன் மனம் கரைந்துவிட்டது. அவன் தன் ஆசனத்தை விட்டெழுந்து மறுபடியுட்கார்ந்து கொண்டான்.

அதன்பிறகு நாகம்மாள் அவனை நோக்கி "மைந்தனே! இப்போது உன்னை இந்த விடத்தில் கண்டபோது நான் உன்னிடம் பேச வெண்ணிவந்தது என்னைப்பற்றி மட்டு மல்ல. என் விஷயங்களைப்பற்றி எனக்கு அக்கரையே யில்லை. ஆனால் என்னைச் சேர்ந்தவர்களின் விஷயத்தில் எனக்கு அனுதாபம் உண்டு. அதைத் தடுக்க என்னால் கூடவில்லை. இப்போது நான் கூறுவதைக் கவனமாய்க் கேள். இத்தீவில் மிக்க கம்பீரமான ஒரு கழுகின் குடும் பம் இருக்கிறது. அது உயர்தரக் கழுகின் குடும்பம். அக்கூண்டில் ஒரு நரி புகுந்திருக்கிறது. அந்த நரியை யழித்துவிட நீ எனக்கு உதவி செய்வாயா?" என்றாள்.

முரு:—"அம்மையே! இப்படி விடுகதையாய்க் கூறினால் எனக்கு விளங்காது. என்ன சங்கதி? தெளிவாய்க் கூறு" என்றான்.

நாக:—"சரி கூறுகிறேன். வசந்த மாளிகையிலிருக்கும் குடும்பம் உனக்குத் தெரியுமல்லவா? தைரியநாதரின் புதல்விகளாகிய மீனாள் புனிதவதி என்ற இருவர் இருக்கிறார்களல்லவா? நீ யவர்களை நேசிக்கிறாயல் லவா?" என்றாள்.

முரு:—ஆம்; அம்மையே! நான் அவர்களை யறிவேன். அவர்களை நேசிக்கிறேன். அதை நீ நன்கறிவாய்.

நாக:—அவர்களை யொருமுறை யறிந்தால் நெடுநாளறிந்த மாதிரியே; ஒரு முறை நேசித்தால் எப்போதும் நேசிப்பதேயாகும்.

முரு:—ஆம்; ஒரு முறை நேசித்தால் எப்போதும் நேசிப் பதேயாகும். ஆனால் அதற்குமேல் ஒன்றுமில்லை.

இப்போது நான் மனம்விட்டு உன்னிடம் கூறுகிறேன். வசந்த மாளிகையிலுள்ள அக்குடும்பத்தார் சமீபகாலத்திலிருந்து என்னை நேசிப்பதை யடியோடு விட்டுவிட்டார்கள். அவர்களுக்கு எப்படி உதவி செய்யலாம் என்பதற்கு வழியை மட்டும் நீ எனக்குக் காட்டு; நான் அவர்களிடம் வைத்த பழைய அன்பை மறக்கவில்லை யென்றும், இடையில் அவர்கள் என்னை யலட்சியம் செய்ததற்காக நான் அவர்கள்மேல் வஞ்சம் கொள்ளவில்லை யென்றும் என் நடக்கைகளால் நான் நிரூபிக்கிறேன்.

நாகம்:—நீ நன்றாகக் கூறினை; அந்தத் தைரியநாதன் மூடத்தனமாய் ஒரு துஷ்ட வஞ்சக பாம்பைத் தன் குடும்பத்திற்குள் விட்டுக்கொண்டான். அவன் பெண்கள் அதன் மாயவலையில் மயங்கிச் சிக்கும்படி விட்டுவிட்டான்.

முரு:—நீ கூறுவது இத்தீவில் புதிதாக வந்து சேர்ந்த குலசேகரன் என்பவனையா?

நாகம்:—ஆம்; அப்பெயரைக் கூறிக்கொள்கிறவனே. அன்று நாம் கப்பற்சேதமடைந்து கடற்கரையில் எறியப்பட்டிருந்த ஒருவனைக் காப்பாற்றினோமல்லவா? நீயே முதலில் உதவி செய்தாயல்லவா? அவனே. அப்போதே மறுபடி ஒரு அலை வந்து அவனைக் கடலில் இழுத்துச் செல்லும்படி விட்டுவிடவேண்டுமென்றே என் மனதிற்றோன்றியது. அப்படியே செய்யாமற் போனோமே யென்று இப்போது நான் மனஸ்தாபப்படுகிறேன்.

முரு:—ஆனால் உலகில் ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்கு ஆபத்தில் செய்யவேண்டிய கடமையைச்

செய்ததற்காக நான் ஒருபோதும் மனத்தாபப்பட மாட்டேன். மீனாளும், புனிதமும், அவர்கள் தந்தையும் என்னைவிட அப்புது மனிதனை அதிகமாக நேசிப்பதாயின் அதைப்பற்றி முறையிட எனக்கு ஒரு நியாயமுமில்லை. இவ்விஷயத்தில் நான் போட்டிக்கு வருவதாயின் எனக்கே அது நகைப்பை யுண்டாக்குமன்றி வேறில்லை.

நாகம்:—நீ நன்று கூறினை. நீ இவ்வாறு அலட்சியமாய்க் கருத அவர்கள் பாத்திரமானவர்களே.

முரு:—ஆனால் அவர்களுக்கு நான் எவ்விதமாக உதவி செய்யலாகும் என்று நீ கருதுகிறாயோ அது எனக்கு விளங்கவில்லை. அக்குலசேகரன் என்பவன் அப்பெண்களிடத்தும் அவர்கள் தந்தையிடத்தும் மிக நெருக்கமாகப் புழங்கிக்கொண்டிருக்கிறான் என்று சற்று முன்புதான் ஹாக்கர் சுந்தரம்பிள்ளையால் நான் கேள்விப்பட்டேன். என்மேல் பிரியம் வைக்காதவர்களிடம் செல்வதும், அந்தக் குலசேகரனுக்குச் சமதையாய் என்னைக்கருதி நான் போட்டிக்குச் செல்வதும் எனக்கு இழிவாகவே தோற்றுகின்றன. மேலும் அவனோ ஆடம்பரமாய் உடையணிந்து கொண்டிருக்கிறான். பயங்கரமும் துணிகரமுமான தரைச்சண்டை கடற்சண்டைகளைப்பற்றியும், தான் மனிதர்களைக் கொன்றதைப் பற்றியும் பெருமையோடு கூறிக் கொள்கிறான். நானோ சாதாரணமான உடையணிந்தவன்; கடற்கரையிலுள்ள பட்சிகளையும் முயல் முதலிய சிறு ஜெந்துக்களையும் வேட்டையாடுவதைத் தவிர வேறு பெருமைகளைக் கூறிக்கொள்ள என்னால் முடியாது.

18655